அப்போஸ்தலருடைய நடபடிகள்

பாடம் 3

முக்கிய கருப்பொருள்கள்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

பொருளடக்கம்

முன்னுரை 1

பரிசுத்த ஆவியானவர் 2

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு 3

கால நேரம் 3

நோக்கம் 6

பெந்*தெகொ*ஸ்தே நாள் 7

தனிச்சிறப்பு 8

அந்நிய பாஷை**கள்** 10

முடிவுகள் 13

பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு 15

சமாரியா 16

செசரியா 17

எபேசு 18

அப்போஸ்தலர்கள் 20

தனித்துவம் 21

தகுதிகள் 22

அஸ்திபாரத்திற்கான நேரம் 23

அதிகாரப்பூர்வம் 24

செயல்பாடு 25

ஆசீர்வாதம் 27

அற்புதங்கள் 28

வெளிப்பாடு 29

பல்வேறு வழிகள் 30

உத்திகள் 30

அமைப்புகள் 33

சபை 35

அவசியம் 35

சரீர வரம்புகள் 35

தற்காலிக வரம்புகள் 36

ஆயத்தம் 37

போதித்தல் 38

அதிகார பொறுப்புடையவர்கள் 39

கஷ்டங்கள் 42

முடிவுரை 44

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முன்னுரை

பெற்றோர்கள் தங்கள் அறிவுறுத்தல்களை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டும் என்பது பெற்றோருடன் இருக்கும் பிள்ளைகள் எல்லோருக்கும் தெரியும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை முதிர்ச்சியடையச் செய்யவும், பயனுள்ள வாழ்க்கையை வாழத் தயார்படுத்தவும் அதே கருத்துக்களை மீண்டும் வலியுறுத்த வேண்டும்.

அதேபோல், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தைப் படிக்கும்போது, லூக்கா சில கருப்பொருள்களை பலமுறை உரையாற்றினார் என்பது விரைவில் தெளிவாகிறது. இந்தத் தொடர் மையக்கருப்பொருள்கள் அவரது புத்தகம் முழுவதும் வருகின்றன. லூக்காவின் போதனைகளைப் புரிந்துகொள்வதற்கான முக்கியமான திறவுகோல்கள் அவைகளே. எனவே, அப்போஸ்தலர் புத்தகத்தின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால், இந்த தொடர்ச்சியான தலைப்புகள் மீது நாம் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும்.

இது *அப்போஸ்தலருடைய நடபடிகள்* என்கிற தொடரின் மூன்றாவது பாடமாகும், மேலும் இந்த பாடத்திற்கு "முக்கிய கருப்பொருள்கள்" என்று தலைப்பிட்டுள்ளோம். இந்த பாடத்தில், ஆரம்பகால சபையின் நாட்களில் கர்த்தருடைய ராஜ்யத்தின் நற்செய்தி தடையின்றி பரவுவதை லூக்கா வெளிப்படுத்தியபோது, மீண்டும் மீண்டும் உரையாற்றிய மூன்று முக்கிய கருத்துக்களைப் பார்ப்போம்.

முந்தைய பாடங்களில், அப்போஸ்தலர் புத்தகத்திற்கான லூக்காவின் நோக்கத்தை சுருக்கமாகச் பார்த்தோம், அவர் சுவிசேஷ செய்தியின் ஆற்றல்மிக்க தாக்கத்தைப் பற்றிய ஒரு வரலாற்றுக் கணக்கை எழுதினார். நாம் பார்த்தபடி, பரிசுத்த ஆவியின் மூலம் கிறிஸ்துவின் தொடர்ச்சியான பணிக்கு நம்பகமான சாட்சியாக வரலாற்றின் உண்மைகளை லூக்கா பதிவு செய்தார். இந்த பாடத்தில், இந்த முக்கிய யோசனையை விளக்குவதற்கும் ஆதரிக்கவும் லூக்கா பயன்படுத்திய சில முக்கிய கருப்பொருள்களை ஆராய்வதன் மூலம் இந்த மைய யோசனையை இன்னும் முழுமையாக ஆராய்வோம்.

அப்போஸ்தலர் புத்தகத்தின் தொடக்கத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றும் அதன் அதிகாரங்கள் முழுவதும் மேம்படுத்தப்பட்ட மூன்று முக்கிய கருப்பொருள்களை நாம் கண்டறிவோம். முதலில், கிறிஸ்துவின் ராஜ்யத்தை விரிவுபடுத்த சபைக்கு அதிகாரம் அளித்த பரிசுத்த ஆவியானவரின் கருப்பொருளைப் பற்றிப் பார்ப்போம். இரண்டாவதாக, கிறிஸ்துவுக்கு சாட்சியாக

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருக்க அழைக்கப்பட்ட மற்றும் கிறிஸ்துவின் சபையை வழிநடத்தவும் ஊழியம் செய்யவும் அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்கள் மீது நாம் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, சுவிசேஷம் மற்றும் ராஜ்யம் வரலாறு முழுவதும் பரவிக்கொண்டே இருப்பதற்கு அப்போஸ்தலர்கள் நிறுவிய சபையின் கருப்பொருளை நாம் கருத்தில் கொள்வோம். முதலில் அப்போஸ்தலருடைய நடபடிகளில் சொல்லப்பட்ட, பரிசுத்த ஆவி மற்றும் அவருடைய செயல்பாடுகளுக்கு நேராக நம் சிந்தையை திருப்புவோம்.

பரிசுத்த ஆவியானவர்

அப்போஸ்தலர் புத்தகம் பரிசுத்த ஆவியின் வளமான இறையியலை முன்வைக்கிறது. மாற்றப்பட்ட வாழ்க்கையை வாழவும், உலகுக்கு சுவிசேஷம் உரைக்கவும் சபைக்கு அதிகாரம் அளிப்பவர் என்று அவரை விவரிக்கிறது. அப்போஸ்தலர்கள் மற்றும் பிற ஆரம்பகால சபைத் தலைவர்களின் ஊழியத்தை ஊர்ஜிதம் செய்ய அவர் பல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்ததாக அது பதிவு செய்கிறது. எதிர்ப்பையும் உபத்திரவத்தையும் எதிர்கொண்ட கிறிஸ்தவர்களுக்கு அவர் மிகுந்த தைரியத்தை அளித்தார் என்பதற்கு இது சாட்சியளிக்கிறது. சுருக்கமாக சொன்னால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம், பரிசுத்த ஆவியானவர் அவருடைய வல்லமையால் சுவிசேஷம் மற்றும் ராஜ்யத்தை பரவச்செய்து, அவருடைய மக்களை தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழ அதிகாரம் அளிப்பவர் என்று விவரிக்கிறது.

அப்போஸ்தலருடைய நடபடிகளில், ஆவியானவர் பல்வேறு வழிகளில் செயல்பட்டாலும், மூன்று காலகட்டங்களில் சபையின் மீது அவர் ஏற்படுத்திய தாக்கத்தின் மீது கவனம் செலுத்துவோம். முதலில், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் அப்போஸ்தலருடைய நடபடிகளில் உள்ள ஆவியானவரைப் பற்றி பார்ப்போம். இரண்டாவதாக, பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் ஆவியானவர் சபைக்கு கொடுக்கப்பட்டதைப் பற்றி ஆராய்வோம். மூன்றாவதாக, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு ஆவியானவரின் கிரியையைப் பற்றி ஆராய்வோம். அப்போஸ்தலர் புத்தகம் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் ஆவியானவரை எப்படி விவரிக்கிறது என்பதை முதலில் பார்ப்போம்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு

அப்போஸ்தலர் 1:3-11 இல், இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுதலுக்கும் இடையில் நாற்பது நாட்களை அவருடைய அப்போஸ்தலர்களுக்குப் போதிப்பதிலே கழித்தார் என்று லூக்கா பதிவு செய்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:3 இல் நாம் வாசிக்கிறபடி:

> நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசினார் (அப்போஸ்தலர் 1:3).

நாம் பார்க்கப்போவதைப் போல,பரிசுத்த ஆவியானவர் விரைவில் அப்போஸ்தலர்களிடம் ஒரு குறிப்பிட்ட வழியில் வருவார் என்பது ராஜ்யத்தைப் பற்றிய இயேசுவின் போதனையில் ஒரு திறனாய்வுமிக்க அம்சமாக இருந்தது.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன் பரிசுத்த ஆவியைப் பற்றி இயேசு போதித்த இரண்டு அம்சங்களை நாம் பார்ப்போம். முதலில், பரிசுத்த ஆவியானவர் வரும் நேரத்தைப் பார்ப்போம். இரண்டாவதாக, அவருடைய வருகையின் நோக்கத்தில் கவனம் செலுத்துவோம். பரிசுத்த ஆவியின் வருகையின் நேரத்தைப் பற்றிய இயேசுவின் போதனைகளை முதலில் பரிசீலிப்போம்.

கால நேரம்

உதாரணமாக, அப்போஸ்தலர் 1:4-8 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகளை கவனியுங்கள்:

> “நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்?” என்று கேட்டார்கள். அவர் இவ்வாறு அவர்களுக்கு சொன்னார்: ”பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” (அப் 1:4-8).

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வரவிருக்கும் ஆவியின் ஞானஸ்நானத்தை பற்றி இயேசு அறிவித்தபோது, இயேசு இஸ்ரவேலுக்கு ராஜ்யத்தை மீட்டெடுக்கப் போகிறாரா என்று அப்போஸ்தலர்கள் கேட்டதைக் கவனியுங்கள். இஸ்ரவேலுடைய ராஜ்யத்தை மீட்டெடுப்பது என்பது பல நவீன வாசகர்களுக்கு அறிமுகமில்லாததாக இருக்கிறது, எனவே அதை நாம் விளக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் மற்றும் யூதாவின் பாவங்கள் மிகவும் பெரியதாக இருந்ததால், தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்த தேசத்திலிருந்து அவர்களை நாடுகடத்தி, அந்நிய நாட்டவரின் ஆட்சியாளர்களின் கொடுங்கோலாட்சிக்கு அவர்களை உட்படுத்துவார் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின் அடிப்படையில், யூதர்களுடைய பாவங்களை மன்னிப்பதன் மூலம், அவர்களை தேசத்திற்குத் திருப்பி, அவர்களை ஆட்சி செய்யவும் தனது மக்களை மீட்டெடுக்க கர்த்தர் மேசியாவை அனுப்புவார் என்று நம்பினார்கள். தாவீதின் வழித்தோன்றலாக, மேசியா இஸ்ரவேல் மற்றும் யூதாவின் மீது ராஜாவாகி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை பூமியில் கர்த்தருடைய ராஜ்யத்தின் மையமாக மாற்றுவார், அங்கு தேவனுடைய மக்கள் நித்திய மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கையை அனுபவிப்பார்கள். முதல் நூற்றாண்டில், இஸ்ரவேல் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நியாயத்தீர்ப்பை அனுபவித்தது, மேலும் இஸ்ரவேல் ராஜ்யத்தை மீட்டெடுக்க ஒரு அரசியல் மேசியாவுக்காக அது மிகவும் ஏங்கியது. ஆகவே, இயேசு பரலோகத்திற்கு ஏறப்போகிறார் என்பதை அப்போஸ்தலர்கள் அறிந்தபோது, அவர் புறப்படுவதற்கு முன்பு இந்த பழைய ஏற்பாட்டின் முன்னறிவிப்புகளை நிறைவேற்றுவார் என்று நம்பினார்கள். அதனால்தான் இஸ்ரவேலுக்கு ராஜ்யத்தை மீட்டெடுப்பதைப் பற்றி அவரிடம் கேட்டார்கள். இருப்பினும், இஸ்ரவேலருக்கு ராஜ்யத்தின் திடீர் அரசியல் மறுசீரமைப்பு குறித்த இந்த பிரபலமான எதிர்பார்ப்பு தவறாக வழிகாட்டப்பட்டது என்றும் சுவிசேஷம் உலகம் முழுவதும் பரவுவதும், கிறிஸ்துவின் மகிமையான வருகை, தேவன் பழைய ஏற்பாட்டை நிறைவேற்றிய விதமாக இருக்கும் தீர்க்கதரிசனம் என்றும் இயேசு கற்பித்தார்.

ஆனால் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பற்றிய இயேசுவின் கூற்றுகளுக்கு பதிலளிக்கும் விதமாக ராஜ்யத்தின் மறுசீரமைப்பு பற்றி அப்போஸ்தலர்கள் ஏன் கேட்டார்கள்? சரி, மீண்டும் ஒருமுறை, அப்போஸ்தலர்கள் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தார்கள். பல வேத பகுதிகளில், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், நியாயத்தீர்ப்பு முடிந்ததும், தேவன் முன் எப்போதும் இல்லாத வகையில் தம் ஆவியை ஊற்றுவார் என்று முன்னறிவித்தார்கள்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏசாயா 44:3-4 இல் ஆவியானவரைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி கூறியதைக் கவனியுங்கள்:

> தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்; உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். அதினால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகளைப்போல வளருவார்கள் (ஏசாயா 44:3-4).

தேவன் தம் ஆவியை அவர் மீது ஊற்றுவார் என்று கூறி இங்கே ஏசாயா மறுசீரமைப்பைப் பற்றி பேசினார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், மேசியா வருவதற்கு முன்பு, இஸ்ரவேல் தேசமானது ரபிக்கள் கூறிய பாவம், ஊழல் மற்றும் மரணம் நிறைந்த யுகத்தில் வாழும் என்று அறிவித்தனர். மேசியா வரும்போது,தேவனுடைய எதிரிகள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று ரபிக்கள் சொல்லிய ஒரு புதிய யுகத்தை வரவழைப்பார், மேலும், அவரது மக்கள் இறுதியில் மாறாத ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். இது நடக்க எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் ஒருபோதும் குறிப்பிடவில்லை, ஆனால் பெரும்பாலான ரபிக்கள் இது ஒரே நேரத்தில் நடக்கும் என்று எதிர்பார்த்தார்கள்.

இந்தக் கண்ணோட்டத்திற்கு மாறாக, கர்த்தருடைய ராஜ்யம் தேசங்கள் முழுவதும் பரவுவதன் மூலம் காலப்போக்கில் வெளிப்படும் என்று இயேசு விளக்கினார். ஒரே நேரத்தில் வருவதற்குப் பதிலாக, தேவனின் மகிமையான ராஜ்யம் பல படிகளில் வரும். வரப்போகும் யுகம் இயேசுவின் பூமிக்குரிய ஊழியகாலத்தில் தொடங்கப்படும். சுவிசேஷ ஊழியத்தின் மூலம் ராஜ்யம் பரவியது, பரலோகத்தில் கிறிஸ்து ஆட்சி செய்யும் போது இது தொடரும். எதிர்காலத்தில் இயேசு திரும்பி வரும்போது, இந்தப் பாவ யுகம் முற்றிலுமாக முடிவடைந்து உலகளாவிய, இந்த மேசியாவின் ராஜ்யம் அதன் முழுமையை அடையும்.

ராஜ்யத்தின் வருகையைப் பற்றிய இந்த கண்ணோட்டம், இயேசு ஏன் அப்போஸ்தலர்களுக்கு பதிலளித்தார் என்பதை விளக்குகிறது. பரிசுத்த ஆவியானவர் சபையின் மீது ஊற்றப்படவிருந்தாலும், இது எல்லாவற்றின் முழுநிறைவேற்றம் நெருங்கிவிட்டது என்று அர்த்தப்படுத்தவில்லை. இயேசு ராஜ்யத்தை மட்டுமே துவக்கினார், மேலும் அவர் திரும்ப வருவதற்கு முன்பு பாவ உலகில் சபை தொடர்ந்து வாழ்ந்ததால் ஆவியின் ஆசீர்வாதம் அவரது சபையை ஆயத்தப்படுத்தியது.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்த ஆவியானவர் வரும் நேரத்தை மனதில் கொண்டு, அவருடைய வருகையின் நோக்கத்திற்கு நேராக நாம் திரும்ப வேண்டும்.

நோக்கம்

அப்போஸ்தலர்களுக்கு அப்போஸ்தலர் 1:8 இல் இயேசு சொன்ன வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்:

> பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8).

இந்த வார்த்தைகளில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் குறித்த புதிய வழியை குறித்து அப்போஸ்தலர்கள் சிந்திக்க வேண்டும் என்பதை இயேசு காண்பிக்கிறார். ராஜ்யத்தின் கடைசி பகுதியில் கொடுக்கப்படுவதை விட, கிறிஸ்துவின் உண்மையான சாட்சிகளாக அப்போஸ்தலர்கள் இருப்பதற்கு பலம் பெறுவதற்காக ஆவியானவர் ஊற்றப்பட போகிறார் என்றும் கூறினார். இயேசு கிறிஸ்து சொன்ன இரண்டு விதமான வடிவங்களை பார்த்து ஆவியானவருடைய ஊழியத்தை, அதாவது, வல்லமை மற்றும் தெய்வீக சாட்சி, இவைகளை பார்ப்போம்.

முதலாவதாக, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் சீஷர்கள் வல்லமையை பெறுவார்கள் என்று இயேசு சொன்னார். "கர்த்தரின் ஆவியானவர்" என்கிற வார்த்தை, பழைய ஏற்பாட்டில் வல்லமையுடன் கூடிய ஆவி என்று பொதுவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தையின் எபிரெய பதம் ***ரூவா எலோஹிம்*** என்பதாகும். இந்த எபிரெய பதம், கர்த்தரிடத்திலிருந்து வரும் வல்லமையின் ஆற்றல் அல்லது வல்லமையுள்ள காற்று என்பதை வெளிப்படுத்துகின்ற வார்த்தையாக இருக்கின்றது. பழைய ஏற்பாட்டில், கர்த்தருடைய சித்தத்தை இந்த உலகம் முழுவதிலும் நிறைவேற்றுவதற்கு கர்த்தருடைய ஆவியானவர் வல்லமையாக கிரியை செய்தார்.

மக்களுடைய வாழ்க்கையிலும் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை, வியக்கத்தக்க வகைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, நியாயாதிபதிகள் 14 மற்றும் 15 ஆம் அதிகாரத்தில், சிம்சோன் மேல் ஆவியானவர் இறங்கி வந்த போது, இஸ்ரவேலர்கள் பெலிஸ்தியர்கள் மீது வெற்றி கொள்ளக்கூடிய அளவிற்கான உடல்ரீதியான வல்லமை சாதுரியத்தை அற்புதமாக சிம்சோன் வெளிப்படுத்தினான்.

ஆவியானவரின் வல்லமையை பற்றி மேலும் சொல்லும்போது, சீஷர்கள் தெய்வீக சாட்சிகளாக இருப்பதற்கு ஆவியானவர் தான் காரணம் என்று

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவும் சொல்லுகிறார். இந்த தொடர்பு பழைய ஏற்பாட்டிலும் பிரதிபலிக்கிறது. பல தருணங்களில், கர்த்தருக்காக திறம்படவும் தைரியமாகவும் பேசுவதற்கு அவருடைய மக்களுக்கு தேவனின் ஆவியானவர் வல்லமை கொடுத்துள்ளார். ஒரு உதாரணத்திற்கு, மீகா 3:8 இல் உள்ள வார்த்தைகளை கவனிக்கவும்:

> நானோ, கர்த்தருடைய ஆவி அருளிய பலத்தினாலும்,
> பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன் (மீகா 3:8).

இந்த வசனத்தில், கள்ளத்தீர்க்கதரிசிகள் எதிர்த்த போதிலும் சத்தியத்தை பேசும்படியாக ஆவியானவர் தைரியப்படுத்தினார் என்று மீகா விளக்குகிறார்.

எனவே, இயேசு கிறிஸ்து அவருடைய அப்போஸ்தலர்களைப் பார்த்து அவருடைய சாட்சிகளாக இருப்பதற்கு அவர்களை பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கு உட்படுத்த போகிறார் என்று சொன்னபோது, பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவர் எப்படி செயல்பட்டார் என்பதை சுட்டிக்காட்டினார். அப்போஸ்தலர்கள் சொன்ன செய்தியை அதிகாரப்படுத்துவதற்கு பரிசுத்த ஆவியானவர் வல்லமையான செய்கையை செய்தார். அவர்களை எதிர்த்தவர்களை பார்த்து பேசுவதற்கான வார்த்தையையும் அவர்களுக்கு கொடுத்தார். அதுமட்டுமல்லாமல், இந்த செயல் விளக்கம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் மீண்டும் மீண்டும் தென்படுகிறது.

பெந்தெகொஸ்தேவிற்கு முன்பதாக பரிசுத்த ஆவியானவர் செயல்பட்ட விதத்தை குறித்து லூக்கா அறிமுகப்படுத்திய ஒரு சில விதத்தை இதுவரை பார்த்தோம். எருசலேமில் சபையாக கூடிவந்தவர்கள் மேல் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்த காரியத்திற்கு நேராக நம்முடைய சிந்தனையை திருப்புவோம்.

பெந்தெகொஸ்தே நாள்

அப்போஸ்தலர் 2:1-4 ல் பரிசுத்த ஆவியானவர் சபையின் மேல் ஊற்றப்பட்டதைப் பார்க்க முடியும்.

> பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது,
> அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஒரிடத்திலே
> வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்
> போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி,
> அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.
> அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும்
> நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள்
> ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர்
> தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு
> பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் (அப்போஸ்தலர் 2: 1-4).

இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை ஆராய்வதற்கு, மூன்று முக்கியமான விஷயங்களின் மேல் கவனத்தைத் திருப்புவோம். பெந்தெகொஸ்தே நாளின் முக்கியத்துவத்தை பார்ப்போம். இரண்டாவதாக, அந்நிய பாஷையில் பேசுவதை குறித்து கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, இந்த நிகழ்வுகளின் முடிவு என்ன என்பதையும் கலந்து ஆலோசிப்போம். பெந்தெகொஸ்தே நாளின் தனிச் சிறப்பை முதலாவது கருத்தில் கொள்வோம்.

தனிச்சிறப்பு

பெந்தெகொஸ்தே என்பது இஸ்ரவேலர்களின் தூய நாள்காட்டியில் கொண்டாடப்படும் நேரமாகும். அது பஸ்கா பண்டிகையுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையது. யாத்திராகமம் 12 மற்றும் லேவியராகமம் 23 ன் படி, பஸ்கா பண்டிகையின்போது, இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து விடுதலை செய்யப்பப்பட்ட வருஷத்தின் நேரத்தை கொண்டாடினார்கள். கடைசி வாதை நிகழ்ந்த இரவை நினைவுகூரும்படி பஸ்கா பண்டிகை கொண்டாடப்பட்டது. அன்று கர்த்தர் எகிப்தியருடைய தலைச்சன் பிள்ளைகளை கொன்றுவிட்டு, உண்மையான இஸ்ரவேலர்களின் இல்லத்தையோ கடந்து போய் விட்டார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் இஸ்ரவேலர்களை விடுதலை செய்த விதத்தை யூதர்கள் நினைவுகூர்ந்து பஸ்கா பண்டிகையை கொண்டாடினார்கள்.

முதல் அறுவடை செய்யும்போது கொண்டாடப்படும் பஸ்கா பண்டிகைக்கு 50 நாட்கள் கழித்து பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாடப்பட்டது. வாக்குத்தத்த பூமியில் கர்த்தர் அளித்த வாழ்வாதாரத்தை கொண்டாடவே இது ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரத்தில், அந்த ஆண்டில் எதிர்பார்த்த அறுவடையின் தானியத்திற்கு நன்றி செலுத்தும் விதமாக, அறுவடையின் முதற் கனியை இஸ்ரவேலர்கள் காணிக்கையாக படைத்தார்கள்.

இதோடு கூட, புதிய ஏற்பாட்டு காலத்தில், பெந்தெகொஸ்தே கொண்டாட்டத்தின்போது, மோசேக்கு கர்த்தருடைய நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதையும் இஸ்ரவேலர்கள் நினைவு கூர்ந்தார்கள். பரிசுத்த ஆவியானவரின் வருகை ஆதி திருச்சபைக்கு மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது என்பது தெரிந்த ஒன்று. ஏனென்றால், எரேமியா தீர்க்கதரிசி மூலமாக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையை இது அவர்களுக்கு நினைவூட்டியது.

எரேமியா 31:31-34 இல் தீர்க்கதரிசி எழுதியதை நாம் கேட்போம்:

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> "இதோ, நாட்கள் வருமென்று" கர்த்தர் சொல்லுகிறார்,
> "அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும்
> புது உடன்படிக்கை பண்ணுவேன்... நான் என்
> நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை
> அவர்கள் இருதயத்திலே எழுதுவேன். நான் அவர்கள்
> தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்"
> (எரேமியா 31:31-33).

இருதயத்தில் பிரமாணம் எழுதப்படுவது பழைய ஏற்பாட்டில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் செய்கையாக இருக்கிறது, அது புதிய ஏற்பாட்டில் நிறைவேறியது.

பழைய ஏற்பாட்டின் இந்தப் பின்னணியை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, அப்போஸ்தலர் 2 ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவர் பெந்தெகொஸ்தே நாளில் வந்தார், இது கிறிஸ்தவ திருச்சபைக்கு மிகவும் தனிச்சிறப்பான ஒன்றாகும். பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது சிலுவையில் இயேசு பலியாக செலுத்தப்பட்டார். அவர் கடைசி பஸ்காவாக பலியாகி, கர்த்தருடைய மக்களை அவர்களுடைய பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு நித்தியத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்தினார்.

1 கொரிந்தியர் 5:7 இல் பவுல் பின்வருமாறு சொல்கிறார்:

> நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக
> பலியிடப்பட்டிருக்கிறாரே (1 கொரிந்தியர் 5:7).

இந்த வெளிச்சத்தில் பார்க்கும்போது, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் வருகை நிகழ்ந்தது ஆச்சரியத்தை தருகிற ஒன்றல்ல. பெந்தெகொஸ்தே அறுவடையின் மேன்மைக்கு நேராக நம்முடைய கவனத்தை ஈர்ப்பது போல, நித்திய இரட்சிப்பின் அறுவடையின் முதல் பலனாக பரிசுத்த ஆவியானவர் வந்தார். எனவே, ஆவியானவர் ஆதி சபையின் கிறிஸ்தவர்கள் மேல் இறங்கி வந்தது, சபையானது அவர்களுடைய இருதயத்தில் நியாயப்பிரமாணத்தை எழுத பெற்றுக் கொண்டதையும், சபையானது தைரியமுள்ள சாட்சிகளாக மாறியதையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. பவுல் ரோமர் 8:23 இல் கிறிஸ்தவர்களைப் பற்றி பின்வருமாறு சொல்கிறார்:

> ... ஆவியின் முதற்பலன்களைப் பெற்றோம் (ரோமர் 8:23).

ஆவியானவர் கொடுக்கப்பட்டதை பற்றி லூக்கா எழுதும்போது, என்ன நடந்தது என்பதன் உயரிய தனிச்சிறப்பை சுட்டிக்காட்ட பெந்தெகொஸ்தேயுடன் இருந்த தொடர்பை வலியுறுத்துகிறார். இது சாதாரண சம்பவம் அல்ல; நடந்த பல

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அற்புதங்களில் இதுவும் ஒன்று அல்ல. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவருடைய வரங்கள் தொடங்கி, இரட்சிப்பின் மிகப்பெரிய அறுவடையை தந்தது. மேலும், தேவனுடைய மேசியாவின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு தேவனுடைய மக்களுக்கு உள்ளார்ந்த புதிதாக்குதலை தந்தது.

இப்பொழுது ஆவியானவர் ஊற்றப்பட்ட நேரமாகிய பெந்தெகொஸ்தேவின் ஒரு சில தனிச் சிறப்புகளை புரிந்து கொண்டிருக்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தின் வெளிப்பாடாக அந்நிய பாஷை செயல்பட்ட விதத்தை நாம் பார்க்கப் போகிறோம்.

அந்நிய பாஷைகள்

அப்போஸ்தலர் 2 இல், பெந்தெகொஸ்தே நாளில் சபையின் மேல் கர்த்தருடைய ஆவியானவர் ஊற்றப்பட்டதை லூக்கா பதிவிடும்போது, அப்போஸ்தலர்களும் மற்ற விசுவாசிகளும் அந்நிய பாஷைகளில் பேசினார்கள். துரதிர்ஷ்டவசமாக, பாஷைகளின் வரம் குறித்து சபையில் அதிக குழப்பம் உள்ளது. எனவே, நாம் இரண்டு கேள்விகளை பிரதிபலித்துக் காட்ட கொஞ்ச நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். முதலாவது, அந்நியபாஷைகளின் வரம் என்றால் என்ன? மற்றும் இரண்டாவது, தேவன் ஏன் இந்த வரத்தை கொடுத்தார்?

நவீன காலத்தில் சபைகளில், வெவ்வேறு கிறிஸ்தவர்கள் அந்நிய பாஷை வரத்தை வித்தியாசமான முறைகளில் புரிந்திருக்கின்றனர். ஒரு சிலர் அந்நிய பாஷைகள் என்பது பேசுவதைவிட கேட்கக்கூடிய ஒரு அற்புதம் என்று வாதிக்கிறார்கள். இந்த வாதத்தின் படி, அப்போஸ்தலர்கள் பரவசமான பேச்சை பேசினார்கள், அதை ஆவியானவர் கேட்டவர்கள் தங்களுடைய பாஷைகளில் புரிந்து கொள்ளும்படி செய்தார்.

குறைந்தபட்சம் இரண்டு அம்சங்களில் லூக்காவின் விவரத்தை பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இது ஆதி கிறிஸ்தவர்கள் தாங்கள் கற்றுக்கொள்ளாத, மற்ற மனிதர்கள் பேசும் பாஷைகளை பேசிய அற்புதமாக இருக்கிறது. முதலில், லூக்கா விசேஷமாக பரிசுத்த ஆவியானவர் மற்ற பாஷைகளில் பேசக்கூடிய திறனை பேசியவர்களுக்கு தந்ததாக எழுதுகிறார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:4 இல் நாம் வாசிக்கிறபடி:

> அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள் (அப்போஸ்தலர் 2:4).

பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வருவதன் மூலம் அற்புதமான கேட்டல் திறனை அவர்கள் பெற்றதாக லூக்கா ஒருமுறை கூட சொல்லவில்லை.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரண்டாவதாக, "பாஷைகள்" என்கிற வார்த்தை கிரேக்க பெயர்ச்சொல் *குலோஸ்ஸா* என்பதிலிருந்து அர்த்தபடுத்தப்படுகிறது. புதிய ஏற்பாட்டிலும் இன்னும் மற்ற கிரேக்க இலக்கியங்களிலும், இந்த வார்த்தை ஒரு சாதாரண மனிதனுடைய மொழியை குறிப்பிடுகிறது. இந்த அமைப்பில், வேறு எந்த காரணத்திற்காகவும் வேறு ஏதாவது அர்த்தத்தில் சொல்லப்பட்டதா என்று சந்தேகிக்க இடமில்லை. எனவே, பெந்தெகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட அந்நிய பாஷைகளில் பேசும் அற்புதம், தாங்கள் கற்றுக்கொள்ளாத மனித பாஷையில் பேசும்படி கொடுக்கப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு திறன் ஆகும்.

ஆனால், பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய பிரசன்னத்தை இந்த குறிப்பிட்ட விதத்தில் வெளிப்படுத்த காரணம் *என்ன?* அந்த நாளில் அந்நிய பாஷையில் பேசியதின் தனிச் சிறப்பு என்ன? அப்போஸ்தலர் 2:16-21 இல் பேதுரு கொடுக்கும் விளக்கத்தை பார்ப்போம்:

> தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது: "கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள். என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" (அப்போஸ்தலர் 2:16-21).

இந்த வேத பகுதியில், பேதுரு யோவேல் 2:28-32 வசனங்களை குறிப்பிட்டு, அந்நிய பாஷை பேசும் அற்புதத்துடன், பெந்தெகொஸ்தே நாளில் அன்று நடந்தது என்ன என்றும் விளக்குகிறார்.

சுவாரஸ்யமாக பார்ப்போமானால், பேதுரு யோவேலின் வார்த்தைகளை துல்லியமாக மேற்கோள் காட்டவில்லை. எபிரெய வேதாகமத்திலும், எபிரெய வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பிலும் யோவேலின் வார்த்தைகள், "இதற்கு பின்பாக கர்த்தர் சொன்னதாவது: எல்லா மக்கள் மேலும் நான் என் ஆவியை ஊற்றுவேன்," என்று இருக்கிறது. ஆனால் பேதுரு யோவேல் 2:28 இல் இருந்ததை பொழிப்புரை செய்து "கடைசி நாட்களில்"என்று சொன்னார். யோவேலின் வார்த்தைகளில் பேதுரு செய்த மாற்றம், பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்வுகள்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கடைசி நாட்களில், இறுதிக் காலங்களின் பகுதி என்று அவர் நம்பினார் என்பதைக் குறிக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவது கடைசி நாளில் நடக்கும் என்பதற்கு ஏதுவாக பேதுருவின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வார்த்தைகளாக அவர் யோவேலின் வார்த்தைகளை மேற்கோள் காட்டியதை நாம் பார்க்க முடியும். பேதுரு யோவேல் 2-ஐ மேற்கோள் காட்டி, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் நிகழ்வதற்கு முன்பு ஆவியானவர் வரவேண்டும் என்பதை குறிப்பிடுகிறார்.

பழைய ஏற்பாடு முழுவதிலும், கர்த்தரின் நாள் என்பது தேவனின் நியாயத்தீர்ப்பு மற்றும் ஆசீர்வாதத்தின் நாள் என்று குறிப்பிடப்படுகிறது. மேலும் சில இடங்களில், தேவன் தன்னுடைய எதிரிகளை முற்றிலுமாக தோற்கடித்து அவருக்கு உண்மையான மக்களை ஆசிர்வதித்த நாளாக இது குறிப்பிடப்படுகிறது.

ஆகவே, கர்த்தருடைய மகத்தான மற்றும் மகிமையான நாளின் காட்சியாக ஆவியானவரின் வருகையை பேதுரு விளக்கியபோது, பெந்தெகொஸ்தே நாளில் நடந்தது வரலாற்றில் ஒரு பெரிய தருணம் என்று அவர் கூறினார். பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் கடைசி நாட்களில் ஒரு அதிசயமாக வந்தார், இது தேவனுடைய ராஜ்யத்தின் இறுதி கட்டங்களை நிறுவும் மகிமையான தெய்வீக தலையீட்டின் நேரம் அதுவாக இருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, ஆவியானவர் ஊற்றப்படுதலின் தனிச்சிறப்பை இந்த நாட்களில் அநேக கிறிஸ்தவர்கள் விட்டுவிடுகிறார்கள். மாறாக, எல்லா கிறிஸ்தவர்களின் தனிப்பட்ட சுத்திகரிப்பின் மாதிரியாக அப்போஸ்தலர் 2 ல் சொல்லப்பட்ட சம்பவத்தை நினைப்பது கிறிஸ்தவர்களுக்கு பிரபலமான ஒன்று. பெந்தெகொஸ்தே நாளிலும் அப்போஸ்தலர் நடபடிகளில் குறிப்பிடப்பட்ட மற்ற சில நிகழ்வுகளிலும் இருக்கிறபடி ஆவியானவரின் வியக்கத்தக்க வெளிப்பாட்டை எல்லா நிஜ ஆவிக்குரிய கிறிஸ்தவர்களும் அனுபவிப்பார்கள் என்கிற எதிர்பார்ப்பை நாம் உருவாக்குகிறோம்.

இதைப் பற்றி இப்படி யோசித்துப் பாருங்கள். தேவனுடைய ராஜ்யத்தைத் தொடங்குவதற்கு பல பெரிய மற்றும் வல்லமையுள்ள தேவனுடைய செயல்கள் நடந்தன என்று புதிய ஏற்பாடு நமக்கு போதிக்கிறது. கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்தார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திற்கு ஏறினார். ஒவ்வொரு முறையும் ஒரு நபர் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, இந்த நிகழ்வுகளின் தகுதிகள் அந்த நபரின் வாழ்க்கையில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் ஒரு தனிமனிதன் தன்னில் புதிய ஜீவனைப் பெறும் ஒவ்வொரு முறையும் மரிப்பதும் இல்லை, எழுவதும், பரமேறுவதும் இல்லை.

ஏறக்குறைய அதே வழியில், தேவன் கடைசி நாட்களைக் கொண்டு வந்த பெரிய நிகழ்வுகளில் பெந்தெகொஸ்தேவில் நிகழ்ந்ததும் ஒன்று என்று புதிய

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாடு கற்பிக்கிறது. அப்போஸ்தலர் நடபடிகளில் ஆவியானவர் விசேஷமான வழிகளில் ஊற்றப்பட்ட மற்ற பல சந்தர்ப்பங்களிலும் இதுவே உண்மை என்பதை இந்தப் பாடத்தில் பின்பு பார்ப்போம். கிறிஸ்தவ சபையின் ஆரம்ப நாட்களிலிருந்தே, பரிசுத்த ஆவியின் பிரசன்னம் சபையில் கிரியை செய்து, ஊழியம் செய்வதற்காக நம்மை செவ்வைப்படுத்தினது. விசுவாசிகளின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறவராக இருக்க வேண்டும் என்று நாம் எப்போதும் எதிர்பார்க்க வேண்டும், ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் நாம் பார்க்கும் அதே வகையான வெளிப்பாட்டை நாம் எதிர்பார்க்கக்கூடாது. உண்மையில், கிரியைகளை பார்க்கும்போது ஆவியின் சிறப்பு வெளிப்பாட்டின் பிற சந்தர்ப்பங்களில் கூட, ஆவியின் வெளிப்பாடுகள் துல்லியமாக ஒரே மாதிரியாக இல்லை. அக்கினி மற்றும் காற்றின் சத்தம், அதே போல் தீர்க்கதரிசன வரம் மற்றும் பெந்தெகொஸ்தே நாளில் பேசப்பட்ட அந்நிய பாஷைகள் ஆகியவை சாதாரண கிறிஸ்தவ அனுபவங்கள் அல்ல. அவை ஒரு பெரிய தெய்வீக தலையீட்டின் விளைவாக இருந்தன, தேவனின் செயலால் அவர் தனது ராஜ்யத்தை துவக்கினார்.

இப்போது பெந்தெகொஸ்தே நாளின் தனிச்சிறப்பை பார்த்துவிட்டு, பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டவுடன் வெளிப்பட்ட அந்நியபாஷைகளின் அற்புதத்தைப் பார்த்தோம், அன்று நடந்த சம்பவங்களின் முடிவுகளுக்கு நாம் திரும்ப வேண்டும்.

முடிவுகள்

உங்களுக்கு நினைவிருக்கும், அப்போஸ்தலர்களைத் தம்முடைய தெய்வீக சாட்சிகளாக ஆக்குவதற்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டதாக இயேசு சொன்னதை இந்தப் பாடத்தில் முன்பு பார்த்தோம். எனவே, பெந்தெகொஸ்தேவின் முடிவுகளைப் பற்றி நாம் விவாதிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் அளித்த விதத்தில் கவனம் செலுத்துவோம், மேலும் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை ஆசீர்வதிக்க இந்த வல்லமையை பயன்படுத்தினோம். முதலில், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கு அதிகாரம் அளித்த விதத்தைக் கவனியுங்கள்.

லூக்கா சுவிசேஷத்தை ஆய்வு செய்யும்போது, பரிசுத்த ஆவியானவர் வருவதற்கு முன்பு, பேதுரு எப்போதும் தன்னுடைய சிந்தனையில் தெளிவானவராக இருக்கவில்லை என்பதைக் காண்கிறோம். அவர் மோசேக்கும் எலியாவுக்கும் கூடாரங்களைக் கட்ட விரும்பியதால், மறுரூப மலையில் அவர் கண்டிக்கப்பட்டார். இயேசு கைது செய்யப்பட்ட இரவு அவர் மூன்று முறை கிறிஸ்துவை மறுதலித்தார். அப்போஸ்தலருடைய நடபடிகளில் பேதுருவின் ஊழியத்தின்போது கூட, லூக்கா, அதிகமாக படிக்கவில்லை என்பதையும்,

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அழுத்தமான வழிகளில் பேசுவதற்கு எதிர்பார்க்கக்கூடிய நபர் இல்லை என்பதையும் கவனத்தில் கொண்டார். அப்போஸ்தலர் 4:13 இல் லூக்காவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு, அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்றும் அறிந்துகொண்டார்கள் (அப்போஸ்தலர் 4:13).

பேதுருவைப் பற்றிய இந்தப் படத்தைப் பார்த்தால், சந்தேகத்திற்கு இடமின்றி பரிசுத்த ஆவியின் வல்லமையே அவரை மாற்றியது மற்றும் பெந்தெகொஸ்தே நாளில் அத்தகைய ஆற்றல்மிக்க மற்றும் வெற்றிகரமான சுவிசேஷத்தை பிரசங்கிக்க அவருக்கு உதவியது. பெந்தெகொஸ்தே நாளில் செய்த பிரசங்கத்தில், கிறிஸ்தவர்கள் குடிபோதையில் இருப்பதாக குற்றம் சாட்டியவர்களை பேதுரு அவர்கள் எண்ணம் தவறானது என்று நிரூபித்தார். அவர் பழைய ஏற்பாட்டை மேற்கோள் காட்டி, விளக்கி, நம்பிக்கைக்குரிய வழிகளில் பயன்படுத்தி, இயேசுதான் தீர்க்கதரிசனமாகக் கூறப்பட்ட மேசியா என்பதை நிரூபிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலர்களையும் அவர்களின் பிரகடனங்களின் உண்மைக்கு சாட்சியாக அற்புதங்களைச் செய்ய அதிகாரம் அளித்தார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:43 இல் நாம் வாசிக்கிறபடி:

> எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது (அப்போஸ்தலர் 2:43).

இந்த சுவிசேஷம் அறிவிக்கப்படுவதற்கு சாட்சியாக பேதுருவுக்கும் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் பரிசுத்த ஆவியானவர் கொடுத்த மாபெரும் வல்லமையின் வெளிச்சத்தில், அப்போஸ்தலர்களின் சாட்சியை ஆண்டவர் ஆசீர்வதித்ததில் எந்தவிதமான ஆச்சரியமுமில்லை. அப்போஸ்தலர் 2:41, 47 இல் லூக்கா அவர்களின் சாட்சியை எப்படி விவரித்தார் என்பதைக் கவனியுங்கள்:

> அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்... தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப்போஸ்தலர் 2:41, 47).

பெந்தெகொஸ்தே நாளில் மூவாயிரம் பேர் மனமாற்றம் அடைந்தார்கள்! வெளியில் தெரிவதும், எண்ணக்கூடியதுமான இந்த வளர்ச்சி ஆவியானவர் அதிகாரத்தை கொடுத்ததின் மூலம் வந்தது. ஆனால் சபையின் வளர்ச்சி வெளியில் தெரிவதாக மட்டும் இருக்கவில்லை. உள்ளான வளர்ச்சியும் ஆவியானவர் அதிகாரம் கொடுத்ததினால் நடந்தது. அப்போஸ்தலர் 2:42-47 இல் உள்ள லூக்காவின் வார்த்தைகளை கவனியுங்கள்:

> அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார் (அப் 2:42-47).

ஆதிகால கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களின் போதனைகளின்படி வாழ்ந்ததால், சபையானது இருந்த இடத்தில் வளர்ந்தது, கர்த்தருக்கும் தங்கள் சக விசுவாசிகளுக்கும் ஊழியம் செய்யும் வாழ்க்கைக்காக தங்களை அர்ப்பணித்துக்கொண்டது. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் பொழிந்ததின் விளைவுகள் சபையின் ஆரம்ப நாட்களில் வியப்பூட்டுவதாக இருந்தது.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பும் பெந்தெகொஸ்தே நாளிலும் பரிசுத்த ஆவியானவர் பற்றிய லூக்காவின் விவாதத்தைப் பார்த்துவிட்டு, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷ ஊழியத்தை தொடர்ந்து வலுப்படுத்தியபோது அவர் எவ்வாறு கிரியை செய்தார் என்பதைப் பார்க்கப்போகிறோம்.

பெந்தெகொஸ்தே நாளுக்கு பிறகு

அப்போஸ்தலர் புத்தகத்தில், பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு லூக்கா ஆவியின் வியத்தகு கிரியைக்கு பல முறை திரும்பினார். விளக்கமாக பார்த்தால், இந்த பத்திகளில் மூன்றில் கவனம் செலுத்துவோம். சமாரியாவில் பெயரிடப்படாத

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒரு நகரத்தில் நடந்த ஒரு நிகழ்வை முதலில் பார்ப்போம். இரண்டாவதாக, செசரியாவில் நடந்த ஒரு சம்பவத்தில் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, எபேசுவில் ஆவியானவரின் வெளிப்பாட்டைக் கருத்தில் கொள்வோம். எருசலேமுக்கு வடக்கே சமாரியாவில் உள்ள ஆவியின் ஊழியத்திற்கு முதலில் திரும்புவோம்.

சமாரியா

அப்போஸ்தலர் 8:14-17 இல், லூக்கா மற்றொரு முறை விசுவாசிகள் மீது ஒரு விசேஷமான விதத்தில் ஆவியானவர் வந்ததை அறிவித்தார். லூக்கா எழுதியதைக் கவனியுங்கள்:

> சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள். இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைமாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு, அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 8:14-17).

அப்போஸ்தலரில் பொதுவாக (இந்த நாட்களில் இருப்பதை போலவே), பரிசுத்த ஆவி மக்கள் முதலில் விசுவாசிக்கும்போது அவர்கள் மீது ஊற்றப்படுகிறார், அதற்க்கு பின்னான வேறு நேரத்தில் அல்ல. இது சம்பந்தமாக, இங்குள்ள காட்சி பெந்தெகொஸ்தே போன்றது: விசுவாசிகள் தங்கள் மனமாற்றத்திற்குப் பிறகு ஆவியைப் பெற்றனர். இது ஒரு விசேஷமான நேரம், ஆவியானவர் ஊற்றப்படும் ஒரு வியத்தகு காட்சி. ஏன் ஆவியானவர் சமாரியர்களிடம் இவ்வாறு வந்தார்?

சரி, இந்த அசாதாரண ஆவியின் பொழிந்தருளப்படுவதின் சிறந்த விளக்கம் என்னவென்றால், இரட்சிக்கப்பட்ட சமாரியர்கள் அதிக எண்ணிக்கையில் கிறிஸ்தவத்திற்கு வந்ததை இது முதன்முறையாகக் குறித்தது. உங்களுக்கு நினைவிருக்கும், எருசலேமிலிருந்து யூதேயா, சமாரியா, பூமியின் கடைசி வரை கர்த்தருடைய ராஜ்யத்தை விரிவுபடுத்தும்படி இயேசு அப்போஸ்தலர்களை நியமித்தார். யூதேயாவில் உள்ள எருசலேம் பெந்தெகொஸ்தே நாளின் தொடக்கப் புள்ளியாக இருந்தது. ஆனால் சமாரியர்கள், யூதர்கள் மற்றும் புறஜாதியினர் கலந்த கலப்பு பாரம்பரியம் கொண்டவர்கள், அவர்கள் பழைய ஏற்பாட்டின்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கட்டளைகளின்படி ஆண்டவரை ஆராதிக்கவில்லை. எனவே, சுவிசேஷம் சமாரியாவை அடைந்தபோது, அது ஒரு புதிய கட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. இயேசு தம் சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளையை நிறைவேற்றுவதில் இது ஒரு முக்கிய படியாக அமைந்தது. இது இன எல்லைகளை கடந்து சென்ற சுவிசேஷத்தின் முதல் பெரிய விரிவாக்கம் ஆகும். சமாரியர்களை சபையில் முழுமையாக இணைத்துக்கொள்ள முடியும் என்று அப்போஸ்தலர்களுக்கும் சபையின் மற்றவர்களுக்கும் சாட்சியளிக்கும் வகையில், பரிசுத்த ஆவியானவர் இந்த விசுவாசிகளுக்கு அந்நிய பாஷைகளில் பேச அதிகாரமளித்தார்.

சமாரியாவில் ஆவியின் கிரியைகளைப் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, நாம் செசரியாவுக்கு நேராக நமது பார்வையை திருப்ப வேண்டும், அங்கு பெந்தெகொஸ்தே நாளில் என்ன நடந்தது என்பதை நினைவுபடுத்தும் வழிகளில் பரிசுத்த ஆவியானவர் மீண்டும் சபையில் கிரியை செய்தார்.

செசரியா

சமாரியாவில் பெயரிடப்படாத நகரத்தில் நடந்த நிகழ்வைப் போலவே, செசரியாவின் நிலைமை முதல் முறையாக சுவிசேஷம் வேறொரு இன எல்லையை கடந்து சென்றது. புறஜாதிகள், குறிப்பாக, ரோமாபுரியை சேர்ந்த நூற்றுக்கு அதிபதியான கொர்நேலியு மற்றும் அவரது குடும்பத்தினர், முதல் முறையாக கிறிஸ்துவுக்குள் வந்தனர்.

அப்போஸ்தலர் 10:44-47 பேதுரு கொர்நேலியுவின் வீட்டாருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது என்ன நடந்தது என்று பதிவுசெய்கிறது:

> இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு ... "நம்மைப்போலப் பரிசுத்தஆவியை இவர்களும் பெற்றார்கள்" என்றான் (அப்போஸ்தலர் 10:44-47).

மீண்டும், பெந்தெகொஸ்தே நாளுக்கு இணையான சம்பவத்தை இங்கே தெளிவாக காண முடியும்: சுவிசேஷத்தை விசுவாசித்தவர்கள் அந்நிய பாஷைகளில் பேச ஆரம்பித்தனர். செசரியாவில் உள்ள விசுவாசிகள் நம்மிடம் இருப்பதைப் போலவே பரிசுத்த ஆவியைப் பெற்றனர் என்று பேதுரு கருத்து

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தெரிவித்தது, ஒருவேளை பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் ஊற்றப்பட்டதைக் சுட்டிக்காட்டுகிறதாக இருக்கலாம்.

பழைய ஏற்பாட்டில், புறஜாதிகள் இஸ்ரவேலுடன் கர்த்தர் ஏற்படுத்தின விசேஷித்த உடன்படிக்கைகளுக்கு புறம்பே இருந்தார்கள். விசுவாசமுள்ள யூதர்கள், வெளிப்படையாக மாறாத புறஜாதிகளிடமிருந்து தங்களைத் தொடர்ந்து பிரித்துக் கொண்டார்கள். எனவே, புறஜாதிகள் முதலில் யூத மதத்திற்கு முழுமையாக மாற்றப்படாமல் கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டது, ஆரம்பகால திருச்சபைக்கு ஆச்சரியமாக இருந்தது.

இதன் விளைவாக, கடைசியாக புறஜாதியினருக்கு கதவு திறக்கப்பட்டது என்பதை நிரூபிக்க பரிசுத்த ஆவியானவர் கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் மீது ஊற்றப்பட்டார். அப்போஸ்தலர் 11:4, 15, 18 களில் இந்த வார்த்தைகளை கவனியுங்கள், அங்கு புறஜாதிகளின் மனமாற்றத்திற்கு சபையின் மறுமொழியை லூக்கா பதிவு செய்தார்:

> அதற்குப் பேதுரு காரியத்தை **ஆரம்பத்தி**லிருந்து வரிசையாய் அவர்களுக்கு விவரிக்கத் தொடங்கி: நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்தஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோலவே, அவர்கள்மேலும் இறங்கினார். இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து: அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள் (அப்போஸ்தலர் 11:4, 15, 18).

பெந்தெகொஸ்தே போன்ற விதத்தில் புறஜாதியார் மீது வருவதன் மூலம், பரிசுத்த ஆவியானவர் அவர்களின் மனமாற்றம் உண்மையானது என்றும், புறஜாதிகள் மூலம் தனது ராஜ்யத்தை கட்டியெழுப்புவதற்கான தனது திட்டம் தொடங்கியது என்றும் நிரூபித்தார்.

இப்போது நாம் சமாரியாவிலும் செசரியாவிலும் ஆவியானவரின் கிரியைகளைப் பார்த்தோம், எபேசுவில் என்ன நடந்தது என்பதை நாம் பார்க்கப்போகிறோம்.

எபேசு

இந்த நிகழ்வு அப்போஸ்தலர் 19:1-6 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது, அங்கு நாம் பின்வரும் விவரத்தை படிக்கிறோம்:

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள்: யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்(அப்போஸ்தலர் 19:1-6).

மீண்டும் ஒருமுறை, பெந்தெகொஸ்தே நாளுக்கு இணையாக குறிப்பிடத்தக்க நிகழ்வு இருப்பதைக் காண்கிறோம். இயேசுவின் நாமத்தில் அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, பரிசுத்த ஆவியானவர் இந்த மனிதர்கள் மீது வந்தார், அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசினார்கள் மற்றும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

இந்தப் பத்தியில், யூதேயா மற்றும் சமாரியாவிலிருந்து வெகு தொலைவில் உள்ள ஆசியா மைனரின் ஒரு பெரிய நகரமான எபேசுவில் பரிசுத்த ஆவியின் வியத்தகு வெளிப்பாட்டை லூக்கா விவரித்தார். நாம் பார்த்தபடி, எருசலேம், சமாரியா மற்றும் புறஜாதிகள் வரை ஆவியானவருடைய கிரியையின் விரிவாக்கத்தை லூக்கா ஏற்கனவே கண்டுபிடித்திருந்தார். இங்கு அசாதாரணமான அம்சம் என்னவென்றால், ஆவியானவரை பெற்றவர்கள் யோவான் ஸ்நானகனின் சீஷர்கள். மறைமுகமாக, இவர்கள் மனந்திரும்பிய யூதர்கள், அவர்கள் இயேசு நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியா என்று யோவான் வெளிப்படுத்துவதற்கு முன்பு யோவான் ஸ்நானகனின் சாட்சியைப் பெற்றார்கள்.

லூக்கா இந்த நிகழ்வை முன்னிலைப்படுத்தினார், ஏனெனில் இது அப்போஸ்தலர் நடபடிகளின் தொடக்கத்தில் லூக்கா வலியுறுத்திய யோவான் ஸ்நானகனுக்கும் இயேசுவுக்கும் இடையிலான உறவு குறித்த ஒரு பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. அப்போஸ்தலர் 1:5 இல், இயேசு தம் ஊழியத்தையும்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யோவான் ஸ்நானகனின் ஊழியத்தையும் இந்த விதத்தில் வேறுபடுத்திக் காட்டியதை நீங்கள் நினைவுகூருவீர்கள்:

> யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்(அப்போஸ்தலர் 1:5).

எபேசுவில் உள்ள யோவானின் சீஷர்கள் மீது ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதைப் பற்றிய இந்தக் கதை, இப்போது ஆவியானவரை வெளிப்படுத்தும் இயேசுவின் கிரியை ஒரு புதிய நிலையை எட்டியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. யோவானின் சீஷர்களும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகவும் கிறிஸ்துவின் ஆவியைப் பெறவும் வேண்டியிருந்தது. கிறிஸ்துவை முழுமையாகத் தழுவி, பரிசுத்த ஆவியின் வல்லமையில் வாழ்வதற்குக் குறைவான எதுவும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக இல்லை.

அப்போஸ்தலர்கள் சபையின் வேலைகளை முன்னெடுத்துச் சென்றபோது, ராஜ்யத்தின் எல்லைகளில் அவர்களின் பணி பரிசுத்த ஆவியின் வியத்தகு வெளிப்பாட்டால் தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டது என்பதை லூக்கா தெளிவுபடுத்தினார். ஆவியின் வல்லமையின் மூலம், எருசலேமிலிருந்து, யூதேயா மற்றும் சமாரியா வரை, பூமியின் கடைசி வரை சுவிசேஷம் தடையின்றி பரவியது. இன்றும் கூட, சபையை மாற்றுவதற்கும், சுவிசேஷத்தை திறம்பட பரப்புவதற்கும் பரிசுத்த ஆவியின் வல்லமை மட்டுமே வழி. சுவிசேஷ செய்தியை வெளிப்படுத்த நாம் தெய்வீக மற்றும் பயனுள்ள சாட்சிகளாக இருக்க வேண்டுமானால், நாமும் ஆவியின் வல்லமையை சார்ந்து இருக்க வேண்டும்.

அப்போஸ்தலர்கள்

பரிசுத்த ஆவியானவரின் கதாப்பாத்திரத்தை கருத்தில் கொண்டு, இப்போது நம்முடைய இரண்டாவது தலைப்பான அப்போஸ்தலர்களைப் பற்றி பேசத் தயாராக இருக்கிறோம். அப்போஸ்தலர்கள். கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறுவதற்கு முன், அவர் தனது ஊழியத்தைத் தொடர அப்போஸ்தலர்களை நியமித்தார், நற்செய்தியின் மூலம் எருசலேமிலிருந்து பூமியின் கடைசி வரை தனது ராஜ்யத்தை விரிவுபடுத்தினார். ஆரம்பகால சபையில் பரிசுத்த ஆவியானவர் ஆற்றிய முக்கிய பங்கை அப்போஸ்தலர் 1:8 விவரிக்கிறது என்பதை இந்த பாடத்தில் முன்பு பார்த்தோம். இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடம் சொன்ன வார்த்தைகளை மீண்டும் கவனியுங்கள்:

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8).

நமது பாடத்தின் இந்த கட்டத்தில், இந்த வசனத்தில் தனித்து நிற்கும் இரண்டாவது பிரச்சனையான அப்போஸ்தலர்களின் கதாபாத்திரம் என்பதில் கவனம் செலுத்த விரும்புகிறோம். இயேசு இங்கே கூறியது போல், பரிசுத்த ஆவியானவர் உலகம் முழுவதும் அவருடைய *சாட்சிகளாக* மாறுவதற்காகவே அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டார்.

ஆதிகால சபைகளில், பாதகமான சூழ்நிலைகளில் சுவிசேஷத்திற்கு சாட்சியமளித்தவர்கள் "இரத்த சாட்சிகள்" அல்லது "சாட்சிகள்" என்று அழைக்கப்பட்டனர். மிகவும் மிதமிஞ்சிய சந்தர்ப்பங்களில், சாட்சிகள் கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருந்ததற்காக சித்திரவதை செய்யப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். உண்மையில், பெரும்பாலான அப்போஸ்தலர்கள் இந்த வழியில் இறந்ததாக சபையின் பாரம்பரிய வரலாறு நமக்குச் சொல்கிறது. லூக்கா ஆதிகால சபையைப்பற்றி எழுதும்போது, எதிர்ப்பின் முகத்தில் கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுப்பது என்ற இந்த கருப்பொருள் ஒரு முக்கிய சுவாரஸ்யமான கருத்தாக இருந்தது. இது சம்பந்தமாக, கிறிஸ்துவுக்கு தைரியமான, பயனுள்ள சாட்சிகளாக யாரும் அப்போஸ்தலர்களை மிஞ்சவில்லை.

கிறிஸ்துவின் சாட்சிகளாக அப்போஸ்தலர்களுடைய பங்கின் மூன்று பரிமாணங்களில் நாம் கவனம் செலுத்துவோம். முதலில், அவர்களுடைய சாட்சி தனித்துவமானது என்பதை நாம் கவனிப்போம். இரண்டாவதாக, அது அதிகாரபூர்வமானது என்று பார்ப்போம். மூன்றாவதாக, அவர்களின் சாட்சியின் மாறுபட்ட தன்மை, சுவிஷேஷத்தை பகிர்வதற்கு அவர்கள் வெவ்வேறு வழிகளைப் பயன்படுத்திய விதம் ஆகியவற்றைப் பார்ப்போம். அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்திற்காக கொண்டிருந்த தனிப்பட்ட தகுதிகளுடன் ஆரம்பிக்கலாம்.

தனித்துவம்

குறைந்தது இரண்டு காரணங்களுக்காக அப்போஸ்தலர்கள் தனித்துவமானவர்கள். ஆரம்பத்தில், அவர்களுடைய ஊழியத்தின் தேவைகள், அவர்களை அப்போஸ்தலர் என்று கூப்பிட வைத்தது.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தகுதிகள்

இயேசுவின் முதல் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான யூதாஸ் ஸ்காரியோத்து, அவரை சிலுவையில் அறைந்தவர்களுக்கு நம் ஆண்டவரைக் காட்டிக் கொடுத்தது நம் அனைவருக்கும் தெரியும். பின்னர், பதினொரு அப்போஸ்தலர்களை விட்டுவிட்டு யூதாஸ் தற்கொலை செய்துகொண்டான். பின்னர், இயேசு பரலோகத்திற்குச் சென்ற பிறகு, பதினொருவரின் முதல் முன்னுரிமைகளில் ஒன்று, யூதாஸுக்குப் பதிலாக பன்னிரண்டாவது அப்போஸ்தலரைத் தேர்ந்தெடுப்பதாகும்.

அப்போஸ்தலர் 1:21-26 இல், புதிய அப்போஸ்தலனுக்கான தேவைகளை பேதுரு இவ்வாறு விவரித்தார்:

> "அவர் நம்மிடத்தில் சஞ்சரித்திருந்த காலங்களிலெல்லாம் எங்களுடனேகூட இருந்த மனுஷர்களில் ஒருவன் அவர் உயிரோடெழுந்ததைக்குறித்து, எங்களுடனேகூடச் சாட்சியாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றான். அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பும் மத்தியாவும் ஆகிய இவ்விரண்டுபேரையும் நிறுத்தி: எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியத்திலும் இந்த அப்போஸ்தலப்பட்டத்திலும் பங்குபெறுவதற்காக, இவ்விரண்டு பேரில் தேவரீர் தெரிந்துகொண்டவனை எங்களுக்குக் காண்பித்தருளும்" என்று ஜெபம்பண்ணி; பின்பு, அவர்களைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள்; சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது (அப்போஸ்தலர் 1:21-26).

இந்த வசனங்கள் அப்போஸ்தல ஊழியனுக்கான தேவைகளை நிறுவுகின்றன, இவை அனைத்தும் வேதத்தில் பட்டியலிடப்பட்டுள்ள அப்போஸ்தலர்களுக்கு தனித்துவமானவை. முதலில், அவர்கள் இயேசுவால் நேரடியாகக் கற்பிக்கப்பட வேண்டும். இரண்டாவதாக, இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அவர்கள் அவரைப் பார்த்திருக்க வேண்டும். மூன்றாவதாக, அவர்கள் தேவனால் தங்கள் ஊழியத்தில் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். பதினொரு அப்போஸ்தலர்களும் இந்த தகுதிகளை பூர்த்தி செய்தனர், ஏனென்றால் அவர்கள் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் போது போதித்தார்கள், அவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவரைப் பார்த்தார்கள், அவர்கள் அனைவரும் இயேசுவால் நியமிக்கப்பட்டவர்கள்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மத்தியாஸ் இந்த தகுதிகளை பெற்றிருந்தார், ஏனென்றால் கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியத்தின் போது அவர் இயேசுவால் கற்பிக்கப்பட்டார்.

அவர் உயிர்த்தெழுந்த கர்த்தரைக் கண்டார், மேலும் அவர் சீட்டுப் போடுவதன் மூலம் தேவனால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்தியாஸுக்குப் பிறகு, அப்போஸ்தல ஊழியத்திற்கு வேதாகமத்தில் ஒரு நபர் மட்டுமே நியமிக்கப்பட்டார்: அவர் பவுல் ஆவார். இயேசு பரலோகத்திற்கு ஏறிய பிறகு பவுல் அப்போஸ்தலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், எனவே அவரை நியமனம் செய்வது குறித்து சபை முதலில் சந்தேகம் கொண்டிருந்தது. ஆனால் அவர் உண்மையில் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவரைப் பார்த்து கற்றுக்கொண்டார் என்றும், அவர் இயேசுவால் நியமிக்கப்பட்டார் என்றும் வேதம் நமக்குக் கற்பிக்கிறது.

உதாரணமாக, அப்போஸ்தலர் 9:3-6 இல் லூக்கா பதிவு செய்தபடி, பவுல், தமஸ்குக்கு போகும் வழியில் உயிர்த்தெழுந்த கர்த்தரைப் பார்த்தார். மேலும், அப்போஸ்தலர் 9:15, மற்றும் 22:12-16 இல் நாம் வாசிக்கிறபடி, அவர் கர்த்தரால் அவருடைய ஊழியத்தில் நியமிக்கப்பட்டார். உண்மையில், அப்போஸ்தலர் 9, 22 மற்றும் 26 இல், பவுல் உண்மையான அப்போஸ்தலனாக சொல்லப்படுவதை நிலைநாட்ட லூக்கா மூன்று முறை பவுலின் நியமனத்தை விவரித்தார்.

ஆனால் பவுல் கூட அவருடைய தகுதிகள் சற்று அசாதாரணமானது என்று ஒப்புக்கொண்டார், ஏனென்றால் இயேசு பரலோகத்திற்கு ஏறிப்போனபிறகு அவர் விசுவாசிக்கவில்லை. பவுல் 1 கொரிந்தியர் 15:8-9 ல் தனது தனித்துவமான மற்றும் குறிப்பிட்ட அப்போஸ்தலத்துவத்தை குறிப்பிட்டார்:

> அகாலப்பிறவிபோன்ற எனக்கும் [இயேசு] தரிசனமானார். நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன் (1 கொரிந்தியர் 15:8-9).

அஸ்திபாரத்திற்கான நேரம்

இந்த தனித்துவமான தகுதிகளைப் பூர்த்தி செய்வதைத் தவிர, அப்போஸ்தலர்கள் தனித்துவமானவர்களாக இருந்தார்கள், ஏனென்றால், அவர்கள் சபையின் வாழ்நாளில் அடித்தளமான நேரத்தில் ஊழியத்தை செய்தார்கள். இந்த சிறப்பு நேரத்தில், அவர்கள் இயேசு கிறிஸ்துவின் சபையை ஸ்தாபிக்கும் வேலைக்காக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் தங்கள் வேலையைச் செய்ததாலும், சபையானது அவர்களின் அஸ்திபாரத்தில் உறுதியாக நின்றதாலும், அவர்களின் சிறப்புப் பணிக்கான தேவை மீண்டும் இருந்ததில்லை.

சபையின் அஸ்திபாரமாக அப்போஸ்தலர்கள் பணியாற்றிய பல வழிகளை லூக்கா குறிப்பிட்டார். முந்தைய பாடத்தில் நாம் பார்த்தது போல், எருசலேமிலிருந்து யூதேயா மற்றும் சமாரியா வரை மேலும் பூமியின் கடைசி

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வரை நற்செய்தியை எடுத்துச் சென்ற முதன்மை சாட்சிகள் அப்போஸ்தலர்களே. அவர்கள் சொல்லிய சுவிசேஷத்தின் மூலம், முதலில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள் யூத மதத்திலிருந்தும், சமாரியர்களின் நெறிதவறிய வழிபாட்டிலிருந்தும், புறஜாதிகளின் புறமதத்திலிருந்தும் வந்தவர்களாகவே இருந்தனர். அவர்களின் தலைமையின் மூலம், வரலாற்றில் முதல் சபையும், சபை பின்பற்ற வேண்டிய முறைகளும் நிறுவப்பட்டன. இந்த வழிகளிலும் மற்றும் பல வழிகளிலும், அப்போஸ்தலர்கள், தனித்துவமான நேரத்தில் தனித்துவமான வேலையைச் செய்தார்கள். இந்த நேரங்கள் மீண்டும் வராது, மேலும் இந்த வேலையை மீண்டும் முடிக்க வேண்டிய அவசியமில்லை.

எபேசியர் 2:19-20 இல், அப்போஸ்தலர்கள் பிரத்யேகமாக அடித்தளம் அமைத்ததை பவுல் இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:

> அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் [சபை] கட்டப்பட்டதாயிருக்கிறது; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் (எபேசியர் 2:19-20).

இயேசுவைத் தவிர மற்றொரு மூலைக்கல் இருக்க முடியாது. அதே விதத்தில், சபைக்கு அடித்தளமாக சேவை செய்யும் அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் இணையைப் போல வேறு ஒன்றும் ஒருபோதும் இருக்க முடியாது.

துரதிர்ஷ்டவசமாக, நம் நாளில் இன்னும் இதுபோன்ற அதிகாரமுள்ள அப்போஸ்தலர்கள் தங்களுக்குள் ஊழியம் செய்வதாகக் கூறும் சபைகளும் இருக்கதான் செய்கின்றன. அப்படி இருந்தாலும்கூட, ஆதி அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியத்தின் தேவைகளுக்கு தனிப்பட்ட முறையில் தகுதியானவர்கள் என்பதை லூக்கா தெளிவுபடுத்தினார், மேலும் அவர்கள் ஒருபோதும் மீண்டும் செய்ய முடியாத ஒரு தனித்துவமான அடித்தள நேரத்தில் அந்த ஊழியத்தை செய்தார்கள். புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களில் சேகரிக்கப்பட்ட அப்போஸ்தலர்களின் சாட்சி இன்னும் நம்மிடம் உள்ளது, ஆனால் இன்று சபையில் இப்படிப்பட்ட அப்போஸ்தலரை நாம் எதிர்பார்க்கக்கூடாது.

அதிகாரப்பூர்வம்

அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்கு ஒரு தனித்துவமான வழியில் சாட்சி கொடுத்ததைக் கண்டு, அவர்களின் சாட்சியின் அதிகாரப்பூர்வ தன்மையைப் பார்க்கப்போகிறோம். அப்போஸ்தலர்களின் அதிகாரம் அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதும் பல வழிகளில் காணப்படுகிறது, ஆனால் எளிமைக்காக

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இவற்றில் நான்கில் மட்டும் கவனம் செலுத்துவோம். முதலாவதாக, அப்போஸ்தலர்களின் அதிகாரத்தை அவர்களுடைய அலுவலகத்தின் செயல்பாட்டில் காணலாம். இரண்டாவதாக, அது அவர்களுடைய ஊழியத்தின் மீது தேவனுடைய ஆசீர்வாதங்களில் காட்டப்படுகிறது. மூன்றாவதாக, அவர்கள் அற்புதங்களைச் செய்த வல்லமையால் தெளிவாகத் தெரிகிறது. நான்காவதாக, அவர்கள் தொடர்ந்து பெற்ற வெளிப்பாட்டிலிருந்து இது தெரிகிறது. அவர்களின் ஊழியத்தின் செயல்பாடு அவர்களின் அதிகாரத்தை வெளிப்படுத்தும் விதத்தை முதலில் பார்ப்போம்.

செயல்பாடு

"அப்போஸ்தலன்" அல்லது கிரேக்கத்தில் 'அப்போஸ்டலோஸ்' என்ற வார்த்தைக்கு 'அனுப்பப்பட்டவர்' என்று பொருள். இது பொதுவாக தூதர்கள், பணிகளை நிறைவேற்ற அனுப்பப்படும் முகவர்கள், மற்றும் அவர்களை அனுப்பியவர்களின் சார்பாக பேச அதிகாரம் பெற்ற தூதர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, லூக்கா 10 இல் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கிக்க எழுபத்திரண்டு மிஷனரிகளை இயேசு நியமித்தபோது, இவர்கள் தற்காலிகமாக செய்தி கொண்டு சென்றவர்கள், மற்றும் கிறிஸ்துவின் அதிகாரத்தின் ஒரு பகுதியை சிறிது காலத்திற்கு தாங்குவதற்காக நியமிக்கப்பட்டனர்.

லூக்கா 10:16 இல், இயேசு சுவிசேஷ ஊழியர்களுக்கு பின்வரும் வார்த்தைகளைக் கூறினார்:

> சீஷரை நோக்கி: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் என்னை அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான் என்றார் (லூக்கா 10:16).

மிஷனரிகள் கிறிஸ்துவுக்குப் பதிலிகளாகக் கருதப்படுவதை இங்கே காண்கிறோம். மிஷனரிகளை ஏற்றுக்கொண்டவர்கள், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாகவும், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் அவரை அனுப்பிய பிதாவை ஏற்றுக்கொண்டவர்களாகவும் எண்ணப்பட்டார்கள்.

இதையும் தாண்டி, லூக்கா 10:17-19 இல் மிஷனரிகள் திரும்பியபோது நடந்த விவாதத்தைக் கவனியுங்கள்:

> பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: "ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எங்களுக்குக் கீழ்ப்படிகிறது" என்றார்கள். அவர்களை அவர் நோக்கி: "சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது" (லூக்கா 10:17-19).

அவர் அவர்களை தனது சுவிசேஷ ஊழியர்களாக நியமித்தபோது, இயேசு தனது அதிகாரத்தின் ஒரு பகுதியை எழுபத்திரண்டு பேருக்கு வழங்கினார். எனவே, அவரைப் பற்றிய அவர்களின் பிரதிநிதித்துவம் வெறுமனே அடையாளமாக இல்லை. மாறாக, அவர்கள் அவருடைய அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள். அவர்கள் தவறு செய்ய முடியாத ஆசிரியர்கள் அல்ல, ஆனால் பேய்களை விரட்டவும், ராஜ்யத்தின் வருகையை அறிவிக்கவும் அவர்களுக்கு அதிகாரம் இருந்தது.

இதைப் போலவே, அப்போஸ்தலர்களும் வல்லமை மிக்க தூதர்களாக இருந்தனர். ஆனால் கிறிஸ்துவைப் பற்றிய அவர்களின் பிரதிநிதித்துவம் அப்போஸ்தலர் புத்தகத்தில் இரண்டு குறிப்பிடத்தக்க வழிகளில் மற்ற சீஷர்களிடமிருந்து வேறுபட்டது. முதலாவதாக, அப்போஸ்தலர்கள் நற்செய்தியைப் பரப்பும் வேலைக்காக நியமிக்கப்பட்டது மட்டுமல்லாமல், சபையின் அலுவலுக்காக நிரந்தரமாக நியமிக்கப்பட்டனர் என்பதை லூக்காவின் வார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றன. அப்போஸ்தலருடைய நடபடிகளில் அப்போஸ்தலர்கள் வேறு சில நபர்களாலேயோ அலுவலாலேயோ மாற்றப்படவில்லை. அவர்கள் கிறிஸ்துவின் அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமல்ல, நிரந்தரமாகச் சுமந்தனர். இரண்டாவதாக, கிறிஸ்துவின் சபையை ஸ்தாபிப்பது மற்றும் ஆளுகை செய்வது தொடர்பான அனைத்து விஷயங்களையும் பேச அப்போஸ்தலர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அப்போஸ்தலர் 15 இல் உள்ள எருசலேம் ஆலோசனை கூட்டத்தின் பதிவு குறிப்பிடுவது போல, அப்போஸ்தலர்களின் வார்த்தை சபையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவர்கள் வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும் கர்த்தரின் விருப்பமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். 2 பேதுரு 3:2 இல் அப்போஸ்தல அதிகாரத்தை பேதுரு விவரித்த விதத்தைக் கவனியுங்கள்:

> பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளையும், இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளையும் நீங்கள் நினைவுகூரும்படி... மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன் (2 பேதுரு 3:2).

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பேதுரு இங்கே குறிப்பிட்டது போல, அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், ஏனென்றால் அவர்கள் இயேசுவின் சித்தம் மற்றும் போதனையின் உண்மையுள்ள உக்கிராணத்துவமுள்ளவர்களாக ஊழியம் செய்தார்கள்.

அப்போஸ்தலர்களின் செயல்பாட்டை விவரித்த பிறகு, சுவிசேஷம் பரவுவதன் மூலம் குறிப்பிட்ட மற்றும் தனித்துவமான ஊழியத்தின் மூலம் கர்த்தர் அவர்களை எப்படி ஆசீர்வதித்தார் என்பதற்கு நேராக திரும்ப வேண்டும்.

ஆசீர்வாதம்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், கர்த்தர் அப்போஸ்தலர்களை அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் ஒவ்வொரு முறையும் மனம் மாறியவர்களைக் கொடுத்து ஆசீர்வதித்தார். நாம் பார்த்தபடி, பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கம் சுமார் 120 பேரிலிருந்து 3,000 பேருக்கு மேல் கொண்டுவந்து சபையை விரிவுபடுத்தியது. இந்த வகையான ஆசீர்வாதம் புத்தகம் முழுவதும் தொடர்ந்தது.

ஒரு ஆசிரியராக, சபையின் இந்த வெளிப்புற, எண்ணக்கூடிய வளர்ச்சி தேவனுடைய அங்கீகாரத்திற்கும் வல்லமைக்கும் சான்றாகும் என்று லூக்கா தனது வாசகர்களுக்குக் கற்பிப்பதில் கவனமாக இருந்தார். மதிப்பிற்குரிய பரிசேயர் கமாலியேலின் வார்த்தைகளை மேற்கோள் காட்டுவது அவர் இவைகளை செய்ததன் ஒரு வழியாக இருந்தது.

அப்போஸ்தலர் 5:38-39 ல், கமாலியேல் யூத சட்டமன்றத்தின் முன் அப்போஸ்தலர்களைப் பற்றி இந்த வார்த்தைகளைக் கூறினார்:

> இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், இந்த மனுஷருக்கு ஒன்றுஞ்செய்யாமல், இவர்களை விட்டுவிடுங்கள்! இந்த யோசனையும் இந்தக் கிரியையும் மனுஷரால் உண்டாயிருந்ததானால் அழிந்துபோம்; தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான் (அப்போஸ்தலர் 5:38-39).

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, புத்தகம் முழுவதும் அப்போஸ்தலர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட நற்செய்தி ஊழியம், அவர்களின் ஊழியத்தை பரிசுத்த ஆவியானவர் பலப்படுத்தி சரிபார்த்தார் என்பதற்கான சான்றாகும்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களின் செயல்பாடு மற்றும் அவர்களின் சுவிசேஷ ஊழியத்தின் மீது தேவனின் எண்ணிலடங்கா ஆசீர்வாதத்தால் வழங்கப்படும் சான்றுகள் தவிர, அப்போஸ்தலர்களின் அதிகாரத்தை அவர்களின் ஊழியத்துடன் வரும் அற்புதங்களிலும் காணலாம்.

அற்புதங்கள்

வேதாகமம் முழுவதும், அற்புதங்களின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்று தூதர்கள் உண்மையைப் பேசுகிறார்கள், மற்றும் கர்த்தரின் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதாகும். யாத்திராகமம் புத்தகத்தில், மோசே உண்மையான தேவனுக்காகப் பேசினார் என்பதை நிரூபிக்க பார்வோனுக்கு முன்பாக பல அற்புதங்களைச் செய்தார். 1 மற்றும் 2 ராஜாக்களில், எலியாவும் எலிசாவும் அற்புதங்களைச் செய்தார்கள், இது அவர்களின் தீர்க்கதரிசனங்களும் போதனைகளும் கர்த்தரிடமிருந்து வந்தவை என்பதை உறுதிப்படுத்தியது. சுவிசேஷ புத்தகங்களில், இயேசு கிறிஸ்து, கர்த்தரின் அபிஷேகம் செய்யப்பட்ட ஊழியக்காரர் என்றும் அவருடைய மக்களைக் காப்பாற்றவும் ஆட்சி செய்யவும் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி என்பதை நிரூபிக்கவும் அற்புதங்களைச் செய்தார்.

ஏறக்குறைய அதே வழியில், அப்போஸ்தலர்களின் அற்புதங்கள் கிறிஸ்துவைப் பற்றிய சாட்சி உண்மையானது என்பதை நிரூபித்தன. அப்போஸ்தலர்கள், அப்போஸ்தலர் 5:16 இல், நோயுற்றவர்களைக் குணப்படுத்தினார்கள். அவர்கள், அப்போஸ்தலர் 14:8 இல், முடவர்களை பழைய நிலைக்கு கொண்டுவந்தார்கள். அவர்கள், அப்போஸ்தலர் 9:40 இல், இறந்தவர்களை எழுப்பினார்கள். அவர்கள், அப்போஸ்தலர் 13:11 இல், பொல்லாதவர்களால் துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள், அப்போஸ்தலர் 12:10 இல், சிறையிலிருந்து தப்பினார்கள். அவர்கள், அப்போஸ்தலர் 27:44 இல், கப்பல் சேதத்திலிருந்து தப்பினார்கள், மேலும், அப்போஸ்தலர் 28:3 இல், விஷ பாம்பு கடியிலிருந்து தப்பினார்கள். சொல்லப்போனால், அவர்களுடைய வல்லமை மிகவும் அதிகமாக இருந்தது, அப்போஸ்தலர் 5:15-ன்படி, பேதுருவின் நிழல் தொட்டவர்களைக் குணப்படுத்தியது. அப்போஸ்தலர் 19:11-12ன் படி, பவுல் தொட்ட துணிகள் பிசாசுகளை விரட்டி, நோயைக் குணப்படுத்தின. இந்த வல்லமை வாய்ந்த அற்புதங்கள் தேவனிடமிருந்து மட்டுமே வர முடியும், அப்போஸ்தலர்கள் உண்மையிலேயே அவருடைய அதிகாரபூர்வமான சாட்சிகள் என்பதை இது நிரூபிக்கிறது.

இதனால்தான் பவுல் 2 கொரிந்தியர் 12:12 இல் தனது சொந்த அற்புதங்களை இவ்வாறு விவரித்தார்:

> அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும்,

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே (2 கொரிந்தியர் 12:12).

பரிசுத்த ஆவியானவரால் பலப்படுத்தப்பட்ட அற்புதச் செயல்கள் ஒரு அப்போஸ்தலனின் அடையாளமாக இருந்தன, அவர் கிறிஸ்துவுக்கும் அவருடைய கிரியைக்கும் மெய்யான சாட்சியமளித்தார் என்பதற்கான ஆதாரம்.

இப்போது நாம் அப்போஸ்தலர்களின் செயல்பாடு, அவர்கள் மூலம் சுவிசேஷம் பரப்பப்படுவதற்கு தேவன் அளித்த ஆசீர்வாதம் மற்றும் அவர்கள் செய்த அற்புதங்களைப் பற்றிப் பார்த்தோம். மேலும், அவர்கள் பெற்ற வெளிப்பாடு அவர்களின் அதிகாரத்திற்கு சான்றாக எவ்வாறு செயல்பட்டது என்பதை இப்போது பார்க்கப்போகிறோம்.

வெளிப்பாடு

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு சுவிசேஷத்தின் உண்மையை வெளிப்படுத்தவும், ஒட்டுமொத்தமாக சபைக்கான முடிவுகளை எடுக்கவும், சபையை முதிர்ச்சியடைய அனுமதிக்கும் கட்டமைப்பு கூறுகளை வடிவமைக்கவும் வழிகாட்டுதலைக் கொடுத்தார் என்று லூக்கா பலமுறை பதிவுசெய்தார். உதாரணமாக, அப்போஸ்தலர் 10 இல், பேதுரு தேவனிடமிருந்து ஒரு தரிசனத்தைப் பெற்றார், அது யூத மதத்திற்கு முழு மாற்றமும் அடையாமல், சபைக்குள் புறஜாதியார்களைக் கொண்டுவர கற்றுக்கொடுத்தது. அப்போஸ்தலர் 16 இல், பவுல் மக்கெதோனியாவில் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்று ஒரு தரிசனத்தைப் பெற்றார். இது ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் பரவலை பெரிதும் விரிவுபடுத்துகிறது.

அப்போஸ்தலர்களின் அலுவல்பூர்வ செயல்பாடுகள், லூக்கா எழுதிய நிருபத்தை நேரடியாக வாசிக்கும் வாசகர்களுக்கும், மற்ற ஆதிகால சபைக்கும், ஊழியத்தில் ஆசீர்வாதம், அங்கீகாரம், அற்புதங்கள் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவை அவர்களின் சந்தேகத்திற்கு இடமில்லாத அதிகாரத்தின் உறுதியான சான்றுகளாக இருந்தன. லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் முழுவதும் பதிவுசெய்தது போல, ஆதிகால சபையானது, அப்போஸ்தலர்களின் அனைத்து போதனைகள் மற்றும் தீர்ப்புகளை ஏற்று கீழ்ப்படிவதன் மூலம் அவர்களின் அதிகாரப்பூர்வமான சாட்சி மற்றும் தலைமைக்கு பதிலளித்தது. அதே வழியில், அப்போஸ்தலருடைய நடபடிகள் போன்ற புத்தகங்களில் உள்ள அவர்களின் போதனைகளின் சுருக்கங்கள் மற்றும் புதிய ஏற்பாட்டில் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துக்கள் மூலம், தற்கால கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் இந்த அதிகாரப்பூர்வமான செய்தியாளர்களுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலர்களின் சாட்சியின் பிரத்யேகத்துவம் மற்றும் அதிகாரபூர்வமான தன்மையை மனதில் கொண்டு, அவர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகிற்கு எடுத்துச் செல்லும் சாட்சிகளாக இருந்த பல்வேறு வழிகளைப் நாம் பார்க்கப்போகிறோம்.

பல்வேறு வழிகள்

அப்போஸ்தலர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் கிறிஸ்துவுக்குச் சாட்சி கொடுத்த பல்வேறு வழிகளைப் பற்றிய நமது விவாதம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், கிறிஸ்துவுக்கு சாட்சியளிக்கப் பயன்படுத்தப்படும் பல்வேறு உத்திகளைக் கருத்தில் கொள்வோம். இரண்டாவதாக, அவர்கள் இந்த சாட்சியத்தை வழங்கிய பல்வேறு அமைப்புகளில் பலவற்றை நாம் குறிப்பிடுவோம். அப்போஸ்தலர் புத்தகத்தில் அவர்கள் கையாண்ட பல்வேறு உத்திகளை முதலில் பார்ப்போம்.

உத்திகள்

கிறிஸ்துவை உலகத்துக்கு காண்பிப்பதில் அப்போஸ்தலர்களும் அவர்களைப் பின்பற்றுபவர்களும் பயன்படுத்திய உத்திகளை விவரிக்க எண்ணற்ற வழிகள் இருந்தாலும், ஆறு முதன்மை அணுகுமுறைகள் இவைகளைப் பற்றி சிந்திக்க உதவியாக இருக்கும். முதலாவதாக, அவர்கள் குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் போன்ற விஷயங்களைக் குறிப்பிடுவதன் மூலம், ரோமப் பேரரசு முழுவதும் அறிவிக்கப்பட்ட வரலாற்றிலிருந்து நிகழ்வுகள் மூலம் பெரும்பாலான வரலாற்றைக் குறிப்பிட்டார்கள்.

உதாரணமாக, அப்போஸ்தலர் 26:26 இல், பவுல் இந்த வார்த்தைகளை அகிரிப்பா ராஜாவிடம் கூறினார்:

> இந்தச் சங்கதிகளை ராஜா அறிந்திருக்கிறார்; ஆகையால் தைரியமாய் அவருக்கு முன்பாகப் பேசுகிறேன்; இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவானதல்லவென்று எண்ணுகிறேன்; இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல (அப்போஸ்தலர் 26:26).

இந்த வசனங்களில், பவுலின் முக்கிய கருத்து என்னவென்றால், அவரும் சபையும் அறிவித்த அடிப்படை உண்மைகள் பண்டைய உலகில் அறியப்பட்ட நிகழ்வுகள் ஆகும். இது போன்ற வரலாற்று நிகழ்வுகளை மேல்முறையீடு செய்வது, அவிசுவாசிகளுக்கு சாட்சி கொடுக்கும்போது அப்போஸ்தலர்கள் பயன்படுத்திய பொதுவான உத்தியாகும்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இரண்டாவதாக, அப்போஸ்தலர்கள் தங்கள் சுவிசேஷ முயற்சியை ஆதரிக்க அடிக்கடி வேதாகமத்தின் உண்மைகளைக் எடுத்துக்கொண்டார்கள். பார்த்துக்கொண்டிருந்த யூதர்களுக்கு சாட்சி கொடுக்கும்போது, அப்போஸ்தலர்கள் பெரும்பாலும் பழைய ஏற்பாட்டை சுட்டிக்காட்டினர். உதாரணமாக, அப்போஸ்தலர் 3:22 இல், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியா இயேசு என்பதை யூதர்களுக்கு நிரூபிக்க மோசேயின் வார்த்தைகளை பேதுரு எடுத்துக்காட்டினார். அப்போஸ்தலர் 23:6 இல், பழைய ஏற்பாட்டு வேதங்களிலிருந்து பெறப்பட்ட இறந்தவர்களின் உயிர்த்தெழுதல் குறித்த யூத நம்பிக்கையை பவுல் புரிந்துகொள்ள வைத்தார்.

மூன்றாவதாக, புறஜாதியார்களுக்கு சாட்சி கொடுக்கும்போது, இயற்கையில் தேவன் வெளிப்படுவதையும், புறமத சிந்தனை அமைப்புகளில் காணக்கூடிய உண்மையான நம்பிக்கைகளையும் அப்போஸ்தலர்கள் புரிந்துகொள்ள வைத்தார்கள். உதாரணமாக, அப்போஸ்தலர் 17:24-27 இல், அத்தேனேவில் தனது சுவிசேஷ விளக்கத்திற்கான தொடக்க புள்ளியாக பவுல் தேவன் மற்றும் மனித வரலாறு பற்றிய பொதுவான புறமதக் கண்ணோட்டங்களைப் பயன்படுத்தினார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை. மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்... கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே (அப் 17:24-27).

இங்கே பவுல் முன்வைத்த கருத்துக்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களால் மட்டுமல்ல, பல புறமதத்தவர்களாலும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டவைகளாக இருந்தன. உண்மையில், அத்தேனேவில் உள்ள மார்ஸ் மேடையில் அதே இடத்தில, பவுல் புறமத இலக்கியங்களைக் கூட குறிப்பிட்டார். அப்போஸ்தலர் 17:28 இல் அவர் கூறியதைக் கவனியுங்கள்:

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> "ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்." அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர்: "நாம் அவருடைய சந்ததியார்" என்று சொல்லியிருக்கிறார்கள் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:28).

இங்கே பவுல் அத்தேனேவில் கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருந்ததைப் போல, கிறிஸ்தவம் மீதான தனது வழக்கைக் கட்டியெழுப்ப கிரேக்க கவிதை எழுத்துக்களை புரிந்துகொள்ள வைத்தார்.

நான்காவதாக, அப்போஸ்தலர்கள் பெரும்பாலும் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு பகிர்ந்தபோது தனிப்பட்ட அனுபவத்திற்கு புரிந்துகொள்ள வைத்தார்கள். அப்போஸ்தலர் புத்தகத்தில், பவுல் இந்த அணுகுமுறையைப் பயன்படுத்தியதாக லூக்கா பலமுறை பதிவு செய்தார். உதாரணமாக, பவுல் தமஸ்குவிற்கு செல்லும் பாதையில் நடந்த தனது வியத்தகு மனமாற்ற அனுபவத்தை அப்போஸ்தலர் 9 இல் பதிவு செய்துள்ளார். இந்த அனுபவத்தை அவர் அப்போஸ்தலர் 22 இல் எருசலேமில் உள்ள யூதக் கூட்டத்திற்கு முன்பாக விவரித்தார், மேலும் அவர் அப்போஸ்தலர் 26 இல் அகிரிப்பா ராஜாவிடம் விவரித்தார்.

ஐந்தாவது, அப்போஸ்தலர்கள் தாங்கள் பிரசங்கித்த நற்செய்தியின் உண்மையை நிரூபிக்கும் பல அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தார்கள். இந்தப் பாடத்தில் நாம் முன்பு பார்த்தது போல், அப்போஸ்தலர்களின் அற்புதங்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் நிரம்பியுள்ளன. எங்கெல்லாம் ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு அற்புதங்களைச் செய்ய அதிகாரம் அளித்தாரோ, அங்கெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்கு அவர்கள் சாட்சி கொடுப்பதற்காகவே அப்படி செய்தார்.

ஆறாவது, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவுக்கு தங்கள் உறுதியான விசுவாசத்தின் மூலம் சாட்சி கொடுத்தனர். கிறிஸ்துவிடம் மக்களைச் சுட்டிக்காட்டுவதற்கு அவர்கள் பெற்ற கவனத்தை அவர்கள் தொடர்ந்து பயன்படுத்தினர், துன்புறுத்தப்பட்டாலும் அல்லது அச்சுறுத்தப்பட்டாலும் கூட அவருடைய அழைப்பைக் கைவிட மறுத்துவிட்டனர். உதாரணமாக, அப்போஸ்தலர் 14 இல், லீஸ்திராவின் மக்கள் பவுலையும் பர்னபாவையும் வணங்க முயன்றபோது, பவுல் தான் ஒரு மனிதன் என்று வலியுறுத்தினார், மேலும் அவர் மக்களை தேவனிடம் வழிநடத்தினார். அப்போஸ்தலர் 4 இல், ஆலோசனை சங்கம் அப்போஸ்தலர்களை பயப்படுத்தி, சுவிசேஷம் செய்வதை நிறுத்தும்படி கட்டளையிட்டபோது, அப்போஸ்தலர்கள் அமைதியாக இருக்க மறுத்துவிட்டார்கள். அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:28-29 இல் நாம் வாசிக்கிறபடி:

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> "நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப்
> போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு
> உறுதியாய்க் கட்டளையிடவில்லையா?" அப்படியிருந்தும், இதோ,
> எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த
> மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல்
> சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான்.
> அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக்
> கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே
> அவசியமாயிருக்கிறது (அப்போஸ்தலர் 5:28-29).

அப்போஸ்தலர்கள் சுவிஷேஷத்திற்கு சாட்சியாக பலவிதமான உத்திகளைக் கையாண்டனர். அவர்களின் முன்மாதிரி மற்றும் போதனைகள் மூலம், அவர்கள் ஆதிகால சபையையும் அவ்வாறே செய்ய பயிற்சி கொடுத்தார்கள். அப்போஸ்தலருடைய நடபடிகளில் லூக்காவின் பதிவின் இந்த அம்சம், நாமும் சுவிசேஷத்தின் சாட்சிகளாக ஊழியம் செய்யும்போது, நாம் பின்பற்றும்படி தேவன் விரும்பும் பல உத்திகளைத் தேடுவதற்கு ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ள கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

கிறிஸ்துவுக்கு சாட்சியாக அப்போஸ்தலர்கள் பயன்படுத்திய பல்வேறு உத்திகளுடன், கிறிஸ்துவின் சார்பாக அவர்கள் சாட்சியமளித்த பல்வேறு அமைப்புகளையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அமைப்புகள்

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் சுவிசேஷத்திற்கு சாட்சி கொடுத்த பல்வேறு அமைப்புகளை நாம் சுருக்கமாகக் கூறுவதற்கு பல வழிகள் உள்ளன. ஆனால் எளிமைக்காக, இந்த அமைப்புகளை நான்கு அடிப்படை வகைகளாகப் பிரிப்போம். முதலில் பொது வெளியில் சொற்பொழிவுகள் நடந்தன. பிரசங்கங்கள், தற்காப்பு உரைகள் அல்லது பிற வகையான சொற்பொழிவுகளில் பொது அமைப்பில் அப்போஸ்தலர்கள் ஒரு பெரிய குழுவை நோக்கி உரையாற்றிய அந்த நிகழ்வுகளை இங்கே நாம் மனதில் வைத்திருக்கிறோம்.

இந்த வகையான விளக்கக்காட்சிகளில், அப்போஸ்தலர்கள் அவர்கள் உரையாற்றும் போது கேட்பவர்களுக்கு ஏற்ப தங்கள் வார்த்தைகளைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருந்தனர். இந்தப் பாடத்தில் நாம் ஏற்கனவே பார்த்தது போல, அவர்கள் யூதர்களிடம் ஒரு விதத்திலும், புறஜாதிகளிடம் இன்னொரு விதத்திலும் பேசினார்கள்.

இரண்டாவதாக, அப்போஸ்தலர்கள் கலந்து பேசுதல் அல்லது விவாதத்தின் பின்னணியில் சாட்சியளித்தனர். இந்த அமைப்பில், எதிர் வாதங்களைக் கொடுக்க

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மக்கள் அழைக்கப்பட்டிருப்பார்கள், மேலும் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்திற்காக பிரதிவாதம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உதாரணமாக, அப்போஸ்தலர் 19 இல், எபேசுவில் உள்ள சொற்பொழிவு திறன்கள் மற்றும் புதிய யோசனைகள் மக்கள் முன் சோதிக்கப்பட்ட ஒரு இடமான திரேணுவுவில் உள்ள விரிவுரை மண்டபத்தில் பவுல் விவாதித்தார்.

மூன்றாவதாக, அப்போஸ்தலர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் அடிக்கடி வீடுகளில் சாட்சி கொடுத்தார்கள். அந்த காலத்தில், குடும்பங்கள் பொதுவாக பெற்றோர்கள் மற்றும் அவர்களது குழந்தைகளை விட அதிகமானவர்களை உள்ளடக்கியிருந்தது. பல உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வீட்டு வேலைக்காரர்கள் அடிக்கடி வந்து போய் இருந்தனர். எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகளில் உள்ள குடும்பங்களைப் பற்றி நாம் படிக்கும்போது, குழந்தைகள், தாத்தா, பாட்டி, மாமாக்கள் மற்றும் அத்தைகள், ஊழியர்கள் மற்றும் வேலைக்காரர்கள் மற்றும் பல சந்தர்ப்பங்களில் அடிமைகள் போன்ற உறவினர்களை நாம் கற்பனை செய்ய வேண்டும். ஒரு குடும்பத்தின் மொத்தக் குழு சராசரியாக 15 முதல் 20 வரை இருக்கலாம். அப்போஸ்தலர்கள் பல இடங்களில் வீடுகளுக்குச் சாட்சி கொடுத்ததற்கான உதாரணங்களை, அப்போஸ்தலர் 10-ஆம் அதிகாரம் போன்றவற்றில், பேதுரு கொர்நேலியுவின் வீட்டாரைப் பற்றி பேசுதல் போன்றவற்றைக் காண்கிறோம்; மற்றும் அதிகாரம் 16 இல் பவுல் லீதியாள் மற்றும் பிலிப்பு சிறைச்சாலை பொறுப்பாளி ஆகியோரின் குடும்பங்களிடம் பேசினார்.

நான்காவதாக, சாட்சியின் வடிவமாக தனிப்பட்ட சுவிசேஷத்தின் உதாரணங்களையும் அப்போஸ்தலருடைய நடபடிகள் கொண்டுள்ளது. உதாரணமாக, அப்போஸ்தலர் 25 இல், பவுல் அகிரிப்பா ராஜாவிடம் ஒரு தனி நபராகப் பேசினார், குறிப்பாக அகிரிப்பாவின் அறிவு மற்றும் அனுபவத்திற்கு ஏற்ப அவருடைய வார்த்தைகளை வடிவமைக்கிறார்.

சுருக்கமாகச் சொன்னால், அப்போஸ்தலர்கள் சில வழிகளில் அல்லது சில அமைப்புகளில் மட்டுமே சாட்சி கொடுப்பதில் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை ஆய்வு செய்யும்போது, அவர்கள் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, ஒவ்வொரு வாசர்களுக்கும் பொருத்தமான வழிகளில் சுவிசேஷத்தை வழங்குவதைக் காண்கிறோம். அவ்வாறு செய்வதன் மூலம், அப்போஸ்தலர்கள் நமக்கு ஒரு முன்மாதிரியை வழங்கியிருக்கிறார்கள், நமது வாசகர்களுடன் மிகவும் வலுவாக எதிரொலிக்கும் விதத்தில் சுவிசேஷத்தின் கூறுகளை வலியுறுத்தவும், ஒவ்வொரு அவிசுவாசியின் வாழ்க்கைக்கும் சுவிசேஷத்தை தொடர்புபடுத்துவதற்கான குறிப்பிட்ட வழிகளைக் கண்டறியவும் கற்பித்தார்கள்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சபை

பரிசுத்த ஆவியானவர் மற்றும் அப்போஸ்தலர்களின் முதல் இரண்டு கருப்பொருள்களைப் பார்த்துவிட்டு, அப்போஸ்தலர்களின் மூன்றாவது முக்கிய கருப்பொருளை பார்ப்போம், அதாவது, அப்போஸ்தலர்களால் நிறுவப்பட்ட சபை.

சபையின் கருப்பொருளை இரண்டு வழிகளில் ஆராய்வோம். முதலில், சபையின் அவசியத்தைப் பார்ப்போம். இரண்டாவதாக, சபை தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்ய அப்போஸ்தலர்களால் எப்படி ஆயத்தம் செய்யப்பட்டது என்று பார்ப்போம். சபையின் அவசியத்தை முதலில் பார்ப்போம்.

அவசியம்

கிறிஸ்து தனது சபையை கட்டுவதற்கு அப்போஸ்தலர்களை நியமித்தார். ஏன்? ஒரு சில மனிதர்கள் கிறிஸ்துவின் செய்தியை முழு உலகிற்கும் தாங்களாகவே எடுத்துச் செல்ல முடியாது என்பதை அப்போஸ்தலர்கள் அறிந்திருந்தனர்; ஒவ்வொரு தேசத்திலும் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்க அவர்களுக்கு சாட்சிகளின் படை தேவைப்பட்டது.

அப்போஸ்தலர்களின் பணியை நிறைவேற்றுவதற்கு சபையை அவசியமாக்கிய இரண்டு காரணிகளைப் பார்ப்போம். முதலாவதாக, அப்போஸ்தலர்களின் சரீர வரம்புகள், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையை அவர்களால் உடல் ரீதியாகச் செய்ய முடியவில்லை என்ற உண்மையைப் பார்ப்போம். இரண்டாவதாக, அவர்களின் தற்காலிக வரம்புகளைப் பார்ப்போம். அதாவது, அவர்கள் சாதாரண மனித வாழ்நாளை தான் வாழ முடியும் மற்றும் அவர்களால் எதிர்கால சந்ததியினருக்கு சாட்சியாக இருக்க முடியாது. இப்போது அப்போஸ்தலர்களின் சரீர வரம்புகளைப் பற்றி முதலில் தொடங்கலாம்.

சரீர வரம்புகள்

நாம் ஏற்கனவே பார்த்தபடி, சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் கிறிஸ்துவுக்கு சாட்சி கொடுப்பதே அப்போஸ்தலர்களின் முதல் ஊழியமாக இருந்தது. ஆனால் அவர்களால் முழு உலகத்திற்கும் "ஜீவனுள்ள நிருபங்களாக" இருக்க முடியவில்லை. இந்தப் பிரச்சனையைத் தீர்க்க, அப்போஸ்தலர்கள் சபைக்கு உண்மையான சாட்சிகளாக இருக்கும் பொறுப்பை ஒப்படைத்தனர். அப்போஸ்தலர்களின் சுவிசேஷத்தின் மூலம் மக்கள் சபையில் சேர்க்கப்பட்டதால், இவை விசுவாசிகள் தங்கள் சொந்த உரிமையின் படி "வாழும் நிருபங்களாக"

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆனார்கள். அவர்கள் சுவிசேஷத்தைப் பின்பற்றி வாழ்ந்தார்கள், இதன் மூலம் இயேசுவைப் பற்றி தங்கள் குடும்பங்களுக்கும் அண்டை வீட்டாருக்கும் சாட்சி பகர்ந்தார்கள். அவர்களில் சிலர் மிஷனரிகளாகவும் சுவிசேஷகர்களாகவும் ஆனார்கள். இந்த வழியில், அப்போஸ்தலர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் உண்மையான சுவிசேஷத்திற்கான சுயத்தை காட்டும் மாதிரியை உருவாக்கினார்கள், சபையே இதில் பெரும்பாலான பணிகளைச் செய்கிறது. நிச்சயமாக, அப்போஸ்தலரின் பிரசங்கத்தில் கலந்துகொண்ட அதே அதிகாரத்துடனும் அதிசயமான உறுதிப்படுத்தலுடனும் சபையில் சுவிசேஷம் செயல்வடிவில் சொல்ல முடியவில்லை. அப்படியிருந்தாலும்கூட, பரிசுத்த ஆவியானவர் இன்னும் வாழ்க்கையிலும் வார்த்தையிலும் சபையின் உண்மையான சாட்சி வாழ்க்கையின் மூலம் ஊழியம் செய்வதிலும், பல புதிய விசுவாசிகளை இந்த வழிமுறையின் மூலம் மாற்றுவதில் பிரியமாயிருந்தார்.

உதாரணமாக, உபத்திரவத்தினால் சிதறடிக்கப்பட்ட விசுவாசிகளைப் பற்றி அப்போஸ்தலர் 11:19-21 சொல்லுவதை கவனியுங்கள்:

> உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல், பெனிக்கேநாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம்வரைக்கும் சுற்றித்திரிந்தார்கள். அவர்களில் சீப்புருதீவாரும் சிரேனே பட்டணத்தாருமாகிய சிலர் அந்தியோகியா பட்டணத்துக்கு வந்து, கிரேக்கருடனே பேசிக் கர்த்தராகிய இயேசுவைக்குறித்துப் பிரசங்கித்தார்கள். கர்த்தருடைய கரம் அவர்களோடே இருந்தது; அநேக ஜனங்கள் விசுவாசிகளாகி, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள் (அப்போஸ்தலர் 11:19-21).

அப்போஸ்தலர்களின் சரீர வரம்புகளைப் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, அவர்களின் இறப்பினால் ஏற்படும் தற்காலிக வரம்புகளை நாம் பார்க்க வேண்டும்.

தற்காலிக வரம்புகள்

இயேசு திரும்பி வருவார் என்று அப்போஸ்தலர்கள் உறுதியாக விசுவாசித்தார்கள், ஆனால் எப்போது என்று தெரியவில்லை. அப்போஸ்தலர் 12ல் ஏரோது ராஜா அப்போஸ்தலனாகிய யாக்கோபை கொன்ற நேரத்தில், இயேசு திரும்பி வரும் வரை சில அப்போஸ்தலர்களும் உயிருடன் இருக்க மாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. எனவே, அப்போஸ்தலர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் சுவிசேஷம் செய்வதற்கு மட்டுமல்லாமல், தாங்கள் இறந்த

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிறகு சபையை கட்டி எழுப்பும் ஊழிய பயிற்சியை சபை விசுவாசிகளுக்கு கொடுத்தார்கள்.

உதாரணமாக, அப்போஸ்தலர் 20:25-28 இல் எபேசு சபை மூப்பர்களுக்கு பவுல் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்... தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன். ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையைக் குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப்போஸ்தலர் 20:25-28).

சுவிசேஷத்தை உண்மையான வழிகளில் பரப்புவதற்கும், விசுவாசிகளை முதிர்ச்சிக்குக் கொண்டுவருவதற்கும் சபை தொடர்ந்து கிறிஸ்துவைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த பவுல் விரும்பினார். எனவே, அவர் தனது மரணத்திற்குப் பிறகு, சபையின் தலைவர்கள் தங்கள் ஊழியத்தை தொடர ஆயத்தமாக இருப்பதை உறுதி செய்தார். அப்போஸ்தலர்களின் உடல் மற்றும் தற்காலிக வரம்புகள் காரணமாக, தேவ ராஜ்யத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்வதற்க்காக, அப்போஸ்தலர்களின் குறுகிய கால மற்றும் நீண்ட கால உத்திகளுக்கு சபையானது மையமாக இருந்தது.

இப்போது நாம் சபையானது உண்மையான சாட்சியாக இருக்க வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசிவிட்டோம், அப்போஸ்தலர்களால் சபை ஆயத்தமாக்கப்பட்டதை நாம் பார்ப்போம்.

ஆயத்தம்

தேவனுடைய ராஜ்யத்தைப் பரப்பும் வேலையைத் தொடர அப்போஸ்தலர்கள் பல வழிகளில் சபையை ஆயத்தப்படுத்தினார்கள். ஆனால் நேரத்தினிமித்தம் நாம் மூன்று கருத்துக்களுக்கு நம்மை மட்டுப்படுத்துவோம்: முதலில், இயேசுவின் உண்மையுள்ள சாட்சிகளாக இருந்த அப்போஸ்தலர்களின் போதனைகள்மேல் விசுவாசமாக இருக்கும்படி அப்போஸ்தலர்கள் சபைக்கு

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அறிவுறுத்தியதைப் பார்ப்போம். இரண்டாவதாக, மூப்பர்கள் மற்றும் உதவியாளர்கள் போன்ற சபை நடத்துபவர்களை நியமிப்பதற்கான அப்போஸ்தலர்களின் ஏற்பாடுகளை நாம் ஆராய்வோம். மூன்றாவதாக, தவிர்க்க முடியாமல் வரப்போகும் கஷ்டங்களைச் சகிக்க அப்போஸ்தலர்கள் சபையை எவ்வாறு ஆயத்தம் செய்தார்கள் என்பதைப் பார்ப்போம். அப்போஸ்தலர்கள் சபைக்கு கொடுத்த போதனையை முதலில் பார்ப்போம்.

போதித்தல்

எபேசியர் 2 இல், அப்போஸ்தலனாகிய பவுல் சபையை ஒரு கட்டிடமாக விவரித்தார், கிறிஸ்துவை மூலைக்கல்லாகவும், அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளை அடித்தளமாகவும் வைத்து சபை கட்டப்பட்டது. எபேசியர் 2:19-20 இல் உள்ள அவருடைய வார்த்தைகளை கவனியுங்கள்:

> ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் (எபேசியர் 2:19-20).

அப்போஸ்தலர்கள் சபையின் ஆரம்பத் தலைவர்கள் என்பதை பவுல் மனதில் வைத்திருந்ததை இங்கே கவனிக்க வேண்டும், ஆனால் அவர்களின் போதனைகளாகிய சபையின் அடிப்படை நம்பிக்கைகள் தான் சபையின் அடித்தளம்.

எபேசியர் 3:4-6 இல், பவுல் தனது போதனையின் அடிப்படை பங்கை இவ்வாறு விவரித்தார்:

> அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை (எபேசியர் 3:4-6).

இதனால்தான் லூக்கா அப்போஸ்தலர் புத்தகத்தில் மிகவும் கவனமாக இருந்ததால், சபை என்ற உண்மையை முன்னிலைப்படுத்தினார்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அப்போஸ்தலர்களின் போதனைகளுக்கு தன்னை அர்ப்பணித்தார். அப்போஸ்தலர் 2:42 இல் அவர் பதிவு செய்தபடி:

> [விசுவாசிகள்] அப்போஸ்தலருடைய உபதேசத்தில்...
> உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2:42).

கிறிஸ்துவுக்கு உண்மையாக இருப்பதற்கும், அவருடைய ராஜ்யத்தை பரப்புவதற்கான நமது முயற்சிகளை தேவன் ஆசீர்வதிப்பதற்கும், கிறிஸ்து பிரதான மூலைக்கல்லாக மட்டுமல்லாமல், அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளின் போதனையாகிய சபையின் அடித்தளத்தின் மீதும் ஆதிகால சபை கட்டப்பட வேண்டும் என்று லூக்கா விரும்பினார். அப்போஸ்தலர்கள் அதிகாரப்பூர்வமாகவும் நம்பகத்தன்மையுடனும் இயேசு கொடுத்த வேலை மற்றும் போதனைகளை நிறைவேற்றினர். எனவே, ஒவ்வொரு காலகட்டத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலர்களின் போதனைகளை அறிவிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும் மற்றும் அதன்படி வாழ வேண்டும்.

கிறிஸ்துவின் சபைக்கு இது இன்றும் உண்மையாக இருக்கிறது. இது இன்று நமக்கு உண்மையாக இருக்கிறது என்பதற்கான மிகத் தெளிவான வழி என்னவென்றால், புதிய ஏற்பாடு முதன்மையாக அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டது. அப்போஸ்தலர்களால் எழுதப்படாத அப்போஸ்தலர் புத்தகம் போன்ற புத்தகங்கள் அப்போஸ்தலர் பணிபிற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றன. இன்று கிறிஸ்துவின் சபையாக, அப்போஸ்தலர்களின் போதனைகளின் உண்மையான சுருக்கமாக புதிய ஏற்பாட்டின் எழுத்துக்களில் நம் வாழ்க்கையை கட்டியெழுப்புகிறோம்.

அப்போஸ்தலர்கள் தங்கள் போதனைக்கு உண்மையாக இருக்க அறிவுறுத்துவதன் மூலம் சபையை ஆயத்தம் செய்ததைப் பார்த்த பிறகு, புதிய பிரதேசங்களிலும், புதிய தலைமுறைகளுக்கும் விரிவடையும் போது, சபையை வழிநடத்துவதற்கும் ஊழியம் செய்வதற்கும் பொறுப்பானவர்களை ஏற்படுத்துவதற்கு அவர்கள் எவ்வாறு சபையை ஆயத்தம் செய்தார்கள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அதிகார பொறுப்புடையவர்கள்

நாம் பார்த்தபடி, அப்போஸ்தலர்கள் உடல் மற்றும் தற்காலிக வரம்புகளை எதிர்கொண்டனர், அவை அவர்களின் பணியை தாங்களாகவே முடிப்பதற்கு தடையாக இருந்தன. இந்த பிரச்சனைக்கான தீர்வின் ஒரு பகுதியாக சபையில் கூடுதல் அதிகார பொறுப்புடையவர்களை ஏற்படுத்துவது அவசியமானது.

பல்வேறு கிறிஸ்தவ மரபுகள் ஆரம்பகால சபையின் அதிகார செயல்பாட்டையும், அலுவல்களையும் பல்வேறு வழிகளில்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புரிந்துகொண்டுள்ளன என்பதை இங்கே நாம் இடைநின்று பார்க்க வேண்டும். சபையின் சில கிளைகள் கண்காணி, மூப்பர் மற்றும் உதவியாளர் ஆகிய மூன்று அலுவல்களை மட்டுமே அங்கீகரிக்கின்றன. மற்றவர்கள் மூப்பர்கள் மற்றும் உதவியாளர் ஆகிய இரண்டு அலுவல்களை மட்டுமே அங்கீகரிக்கிறார்கள். இன்னும் சில அப்போஸ்தலன், மிஷனரி, சுவிசேஷகர் மற்றும் வேறு சில அலுவல்களையும் அங்கீகரிக்கின்றன.

சரியான சபையின் ஆளுமை அதிகாரம் குறித்த கேள்வி இந்த பாடத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது, ஆனால் சபை கர்த்தரின் வேலையை நிறைவேற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்த கூடுதலாக சபையில் அதிகாரமுடையவர்களை அப்போஸ்தலர்கள் நியமித்தனர் என்ற பொதுவான கருத்தை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

உண்மையில், அப்போஸ்தலர்கள் மிக விரைவாக கூடுதல் அதிகாரிகளை நியமிக்கத் தொடங்கினர், ஏனென்றால் எருசலேமில் உள்ள உள்ளூர் சபையுடன் தொடர்புடைய ஊழியங்களைக்கூட அவர்களால் செய்ய முடியாது என்பதை அவர்கள் அன்றே உணர்ந்தார்கள். சபை அதன் உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை உறுதி செய்வதற்காக அப்போஸ்தலர்கள் உதவியாளர்களை ஏற்படுத்தியதை அப்போஸ்தலர் 6 இல் மிகத் தெளிவாகக் காண்கிறோம். இந்த விதத்தில், தினசரி உணவு விநியோகத்திற்கு பொறுப்பான ஆண்களைத் தேர்ந்தெடுக்க அப்போஸ்தலர்கள் சபைக்கு அறிவுறுத்தினார்கள்.

அப்போஸ்தலர்கள் இதை கையாண்ட விதத்தை அப்போஸ்தலர் 6:3-6 இல் கவனியுங்கள்:

> ”ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள் (அப்போஸ்தலர் 6:3-6).

அப்போஸ்தலர்கள் பல்வேறு உள்ளூர் சபைகளை மேய்ப்பதற்கும் வழிநடத்துவதற்கும் பெரும்பாலும் போதகர்கள் என்று அழைக்கப்படும் மூப்பர்களையும் நியமித்தனர். உதாரணமாக, அப்போஸ்தலனாகிய பவுலின் மிஷனரி பயணங்களின் போது, பொதுவாக புதியவர்களை சபைகளாகக் கூட்டி,

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர் வெளியேறும்போது சபையின் பொறுப்பை ஏற்கும் தலைவர்களை நியமித்தார்.

இதற்கான உதாரணத்தை அப்போஸ்தலர் 14:23 இல் பார்க்கிறோம், அங்கு லூக்கா இந்த விவரத்தை கொடுக்கிறார்:

> அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் (அப்போஸ்தலர் 14:23).

உண்மையில், அப்போஸ்தலர்கள் சபைக்கு மூப்பர்களை ஆயத்தப்படுத்துவதில் மிகவும் நோக்கமாக இருந்தார்கள், அப்போஸ்தலர்கள் இருந்தபோதும், அவர்களுடன் சேர்ந்து வழிநடத்த மூப்பர்களை ஊக்குவித்தார்கள். அப்போஸ்தலருடைய நடபடிகளில் இதற்கு மிக முக்கியமான உதாரணம் எருசலேமில் உள்ள ஆலோசனை சங்கம் ஆகும், இது புறஜாதிகளின் கேள்விக்கு தீர்வு காண கூட்டப்பட்டது. உதாரணமாக, புறஜாதியார்களை சபையில் எவ்வாறு இணைப்பது என்ற கேள்விக்கு இது பதில் தந்தது. இந்தச் சபைக்கு அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் சேர்ந்து தலைமை தாங்கினார்கள். அப்போஸ்தலர் 15 இல், இந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ளது, அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் குறைந்தது ஐந்து முறையாவது சபையின் தலைவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அப்போஸ்தலர் 15:1-2 இல் அதிகாரம் தொடங்கும் விதத்தைக் கவனியுங்கள்:

> சிலர் யூதேயாவிலிருந்து வந்து: "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள்" என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள். அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்த வேறுசிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள் (அப் 15:1-2).

பவுலும் மற்றவர்களும் அப்போஸ்தலர்களுடனும் மூப்பர்களுடனும் ஆலோசனை செய்ய அனுப்பப்பட்டனர். இதே அதிகாரத்தில் 4, 6, 22 மற்றும் 23 வசனங்களில் இதே போன்ற வாக்கியங்களை காண்கிறோம்.

அப்போஸ்தலர் புத்தகம் முழுவதும், மேசியா ராஜ்யத்தினுடைய கர்த்தரின் ஊழியத்தை நிறைவேற்ற சபையின் அதிகாரிகளை அப்போஸ்தலர்கள்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கூப்பிட்டார்கள். அப்போஸ்தலர் 20 இல் எபேசு சபை மூப்பர்களுக்கு பவுல் கொடுத்த உரையில் இதை நாம் காண்கிறோம். அப்போஸ்தலர் 15 மற்றும் 21 இல் எருசலேமில் சபையை வழிநடத்தியதாகத் தோன்றும் யாக்கோபு போன்ற மூப்பர்களின் முக்கிய இடத்தில் நாம் இதைக் காண்கிறோம்.

தீத்து 1:5 இல் உள்ள அதிகாரிகளின் நியமனம் பற்றி பவுல் எழுதிய விதத்தை கவனியுங்கள்:

> நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே (தீத்து 1:5).

பவுல் தான் முடிக்காமல் விட்டுவிட்டதை சரியாக்கும்படி இளம் போதகர் தீத்துவை அறிவுறுத்தினார். அதாவது, அப்போஸ்தலனாகிய பவுல் ஆரம்பித்ததை மூப்பனாகிய தீத்து முடிக்க வேண்டும்; அவர் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பரப்பும் அப்போஸ்தல அங்கீகாரத்திற்குரிய பணியைத் தொடர வேண்டும்.

பவுலும் மற்ற அப்போஸ்தலர்களும் இந்த அதிகாரிகளை அவர்களிடமிருந்து ஊழியப் பணியை தொடர்ந்து செய்ய நியமித்தார்கள். அப்போஸ்தலர்கள் எல்லாவற்றையும் தாங்களாகவே செய்ய வேண்டும் என்று தேவன் ஒருபோதும் எண்ணியதில்லை. அவர் தனது சபையை ஸ்தாபிக்கும் நோக்கத்தில் அப்போஸ்தலர்களை தெரிந்துகொண்டார். ஆனால், அப்போஸ்தலரிடமிருந்து சபையின் தலைமையைப் பெறும் மற்றவர்களையும், அப்போஸ்தலர்களின் அஸ்திபாரத்தின் மீது தொடர்ந்து கட்டியெழுப்பக்கூடிய அதிகாரிகளையும், அப்போஸ்தலர்கள் ஒருபோதும் அடைய முடியாத இடத்திலும், காலத்திலும் தேவனுடைய ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்கு அவர்களுக்கு பயிற்சி கொடுத்தார்கள்.

அப்போஸ்தலர்கள் இயேசுவின் வேலையையும் போதனைகளையும் சபைக்கு கற்பித்ததையும் கிறிஸ்துவின் பணியை நிறைவேற்ற கூடுதல் அதிகாரிகளை நியமித்ததையும் இதுவரை நாம் பார்த்தோம். இந்த கட்டத்தில், சபை முன்னோக்கி போகும்போது தவிர்க்க முடியாமல் வரும் கஷ்டங்களுக்கு அப்போஸ்தலர்கள் எவ்வாறு ஆயத்தப்படுத்தினார்கள் என்பதைப் பற்றி பேசப்போகிறோம்.

கஷ்டங்கள்

லூக்கா அப்போஸ்தலர்களின் வேலையை சிரமம், ஆபத்து மற்றும் உபத்திரவங்கள் நிறைந்ததாக விவரித்தார். அப்போஸ்தலர்கள் அடிக்கடி கைது

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்யப்பட்டு தாக்கப்பட்டார்கள். அப்போஸ்தலனாகிய யாக்கோபு, ஏரோது ராஜாவால் தூக்கிலிடப்பட்டார். அப்போஸ்தலர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையில் நடந்ததே மற்ற கிறிஸ்தவர்களின் வாழ்க்கையிலும் உண்மையாக நடக்கும் என்று அறிந்திருந்தார்கள்.

ஒரு சிறந்த அதிகாரத்தில், கோபமான அவிசுவாசிகளால் லீஸ்திரா நகரத்தில் பவுல் கல்லெறிந்து இறந்து போகும் அளவிற்கு போய்விட்டார். அடுத்த நாள், அவர் அருகிலுள்ள தெர்பை நகருக்கு தப்பிச் சென்றார். ஆனால் சீக்கிரத்தில், விசுவாசிகளை உற்சாகப்படுத்த லீஸ்திராவிற்கும் மற்ற நகரங்களுக்கும் திரும்பினார்.

பவுலின் உயிரை எடுப்பதற்காக செய்யப்பட்ட இந்த முயற்சியின் பின்னணியில் லூக்கா இந்த வார்த்தைகளை அப்போஸ்தலர் 14:21-22 இல் பதிவு செய்தார்:

> [பவுல் மற்றும் பர்னபாஸ்] அந்தப் பட்டணத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" என்று சொன்னார்கள் (அப்போஸ்தலர் 14:21-22).

அவர்கள் பட்ட கஷ்டங்களையும் உபத்திரவத்தையும் சந்திக்க நேரிடும் என்பதை திருச்சபை புரிந்து கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர்கள் விரும்பினார்கள். சிலர் தங்கள் விசுவாசத்தினிமித்தம் கொல்லப்படுவார்கள். ஆனால் ராஜ்யத்தின் இலக்கு மதிப்புக்குரியது. எனவே, சபை கிறிஸ்துவுக்கு உறுதியுடன் உண்மையாக இருக்க வேண்டும்.

கஷ்டங்களை எதிர்கொள்ள அப்போஸ்தலர்கள் சபையை ஆயத்தப்படுத்திய விதத்தை எபேசு சபையிலிருந்து வந்த மூப்பர்களுக்கு பவுல் எழுதிய புகழ்பெற்ற பேச்சிலும் காணலாம். அப்போஸ்தலர் 20 இல், பவுல் அவர்களை மீண்டும் பார்க்க முடியாது என்று கூறினார். அங்கு அவர் கைது செய்யப்பட்டு கொல்லப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதால், அவர் எருசலேமுக்குச் செல்வதாகக் கூறினார். தனது சொந்த வாழ்க்கைக்கான இந்த மோசமான கண்ணோட்டத்தின் பின்னணியில், பவுல் எபேசிய சபையை அவர்களுக்கு வரப்போகும் கஷ்டங்களை எதிர்கொள்ள தயார்படுத்த எச்சரிக்கைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

அப்போஸ்தலர் 20:28-31 இல், அவர் எபேசிய மூப்பர்களிடம் இந்த வார்த்தைகளைப் பேசினார்:

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஒநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், விழித்திருங்கள்! (அப்போஸ்தலர் 20:28-31).

பல அப்போஸ்தலர்கள் சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் இதே போன்ற விஷயங்களை எழுதினார்கள். பேதுரு, யோவான் மற்றும் பவுல் ஒவ்வொருவரும் சபைகளை விசுவாசத்தின் எதிரிகளுக்கு எதிராகக் கண்காணிக்கவும், வேதவசனங்கள் மற்றும் அவற்றின் போதனைகளைச் சார்ந்திருக்கவும், கிறிஸ்துவுக்கு உண்மையாக இருக்கவும் அறிவுறுத்தினார்கள்.

இவை அனைத்திலும், அப்போஸ்தலர்களின் நோக்கம் சபைகளை ஊக்கப்படுத்தி, கஷ்டங்களின் மத்தியில் கிறிஸ்துவை நம்புவதற்கும், பரிசுத்த ஆவியின் வரங்கள் மற்றும் கிருபைகளைச் சார்ந்து, தேவனின் பணியைத் தொடர சபையை ஆயத்தப்படுத்துவதாகும்.

சபையை அப்போஸ்தலர் பண்பிற்குரிய சாட்சியத்திலும் போதனையிலும் நிலைநிறுத்துவதன் மூலம், சபையில் அதிகாரிகளை நிறுவுவதன் மூலம், கஷ்டங்களை எதிர்கொள்ள சபையை தயார்படுத்துவதன் மூலம், மேலும் பல வழிகளில், திருச்சபை எல்லா இடங்களிலும், எல்லா காலத்திலும் தேவனுடைய ராஜ்யத்தை விரிவுபடுத்தும் தனது வேலையை நிறைவேற்ற முடியும் என்பதை அப்போஸ்தலர்கள் உறுதி செய்தார்கள்.

முடிவுரை

இந்தப் பாடத்தில் அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மூன்று முக்கிய கருப்பொருள்களை ஆராய்ந்தோம். பரிசுத்த ஆவியின் செயல்பாடுகள் மற்றும் வரங்களை நாம் பார்த்தோம். கிறிஸ்துவின் தனிப்பட்ட அதிகாரமுள்ள சாட்சிகளாக அப்போஸ்தலர்களின் முக்கியத்துவத்தை நாம் விவாதித்தோம். சபையை ஸ்தாபிப்பதன் மூலம் அப்போஸ்தலர்கள்

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவர்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை எவ்வாறு நிறைவேற்றினார்கள் என்பதை நாம் பார்த்தோம்.

அப்போஸ்தலர் புத்தகம், வரலாறு மற்றும் இறையியலின் குறிப்பிடத்தக்க படைப்பாகும். தெயோப்பிலு மற்றும் ஆதிகால சபைக்கு லூக்கா எழுதியது போல, பரிசுத்த ஆவியின் வல்லமையில், பூமியிலுள்ள தேசங்களுக்கு அவர்கள் சாட்சி கொடுப்பதன் மூலம், தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பரப்புவதன் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். இதே பாடங்களை இன்று நாம் நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்தும்போது, நாமும் தேவனுடைய ராஜ்யத்திற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும், கிறிஸ்து தம்முடைய நித்திய ராஜ்யத்தை முழுமைப்படுத்த திரும்பும் நாளை எதிர்நோக்கி காத்திருப்போம்.

வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.